
“இருப்பது ஒன்றே!”
“நடப்பது நலமே!
திகழ் சேர்வு. I
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# “இருப்பது ஒன்றே!”
# “நடப்பது நலமே!”

இதழ் ஒன்று. I

# பொருளடக்கம்


௧. கேள்வி, பதில் ---------- 1

௨. பர உணர்வு ---------- 16


எல்லாம் நீ!



(ஸத்திய வாக்கை) (1)

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!

"ஸ்ரீஸத்குரு திருவடி துணை" "நம்பினார் கெடுவதில்லை"!

"தெய்வம் மனுஷ்யாணாம்!" "யத்பாவம் தத்பவதி"!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம், ஓம்!"

"அகம் பிரம்மம், ஜெகம்பிரம்மம், அகமே எல்லாம்"!


ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!

ஓம் ஆத்மானந்த, பரிபூரண குழந்தைகளே!

அடங்கி வாழ்தலினால், உங்கள் சாதனை, முற்றுப் பெற்று, ஜீவன் முக்தி பெறுவீர்கள் என்றும், வெற்றி விட்டீர்கள் என்றும்; ஆசி கூறி, வாழ்த்துகிறேம்!

உங்களுக்கு முற்கவன சக்தியும், தற்காப்பு சக்தியும் வேண்டாம் என்றும், தற்கவன சக்தி வேண்டும் என்றும், உங்கள் அன்னையின், திருப் பாதம்பற்றி வேண்டிக் கொள்கிறேம்! பணிவே பாதையாக கொண்டால், அனைத்தும் சித்திக்கும், என உணருங்கள். அதற்கு, பொறுமையே, உங்கள் நண்பனாகும்.

உ




ஓர் அன்பு குழந்தையின் கேள்வி:- ஹே அன்பான
பாபாவே! உண்மை பக்தர்கள், சொல்லும் வாசகம்
யாதெனின். நீ எந்த விநாடியும், ஸ்ரீ பகவன் நாமஸ்மரணை
யுடன் இருந்தாலும், உன் மரணத் தருவாயில், அதாவது
பிராணன் பிரியும் போது, அந்த விநாடி,
ஸ்ரீ பகவன் நாமஸ்மரணை, வேண்டும் என்றும்,
அது சமயம், ஸ்மரணை கெட்டால், அந்த விநாடி,
உன் எண்ணம், எதுவோ, அந்த ஜன்மா உண்டென்றும்,
ஸ்ரீ மஹான்களும், தாங்களும் சொல்கிறீர்கள்.

அது பற்றிய சந்தேகம்?

சிலர் எந்த அவஸ்தையும் இல்லாமல், பிராணன் சென்று
விடுகிறது. சிலர் கடும் அவஸ்தை படுகிறார்கள்.
அதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். அவ்
வேதனை காலங்களில், இறை குரு ஸ்மரணை வருவது
மிக மிக மிக கடினமானது. அதற்காகத்தான்
அதை மரண அவஸ்தை என, சொன்னார்கள்
போலும்? எம் கேள்வியாவது?

(1) அவஸ்தைக்கு, மாற்று உபாயம் உண்டா?

(2) அவ்வவஸ்தையிலும், இறை குரு உணர்வுடன்,
இருக்க முடியுமா?



③ இப்போதுள்ள, இறை குரு ஸ்மரணை, அப்போது
கை கொடுக்குமா?
இம்மூன்று கேள்விகளுக்கும், எளிய முறையில்,
நாங்கள் உணரும் நிலைக்கு, விடையருளினால்,
நல்ல பயனாக இருக்கும்?
ஓர் வைத்தியத்தின் பதில் :- குழந்தாய்! இது
நல்ல பயனுள்ள கேள்வியே. கவனம் தேவை.
உணர்வால் உணர். உன் கேள்வியானது, இரு
நிலைகளில் பயன்படும்.

① ஆழமான கரைந்து, உணர்ந்த பக்தி!
② ஓர் ஸத்குரு மூலமாக, உணர்ந்த ஆத்ம ஞானம்!

① ஆழமான கரைந்து, உணர்ந்த பக்தி :-
இப்பக்தி நிலைக்கு, ஓர் ஸ்ரீ ஆழ்வாரின், ஸத்திய
அனுபவ வாக்கு :- உடல் நலிந்து (கெட்டு) கண்
இருண்டு, காது அடைபட்டு, தொண்டை அடைத்து,
மூச்சு திணறி, செய்வது அறியாது, ஓர் மிரட்சியான
பயம் வந்து, எம்மை கொள்ளும் போது, அவ்வேளை
எம்பிரானே! உன்னை நினைக்க முடியுமோ? முடியாதோ?



உ


யாம் அறியோம். அதை இப்போது, கற்பனை செய்து பார்த்தாலும், அதை வரிவடிவில் எழுத முடியவில்லை. அத்தகைய, கடினபயம், இப்போது தோன்றுகிறது.

ஆகவே?

எம் கருணைக் கடலே! கிருபா ஸாகரமே! ஆனந்த மணிவண்ணா! எம் கமலக்கண்ணா! கமல நயனா! உம் ஸ்ரீ பத்ம பாதங்களை, இப்போதே கெட்டியாக பற்றிய நிலையில், கதறி அழுது, உருகி முறையிடுகிறோம்.


**"அப்போதைக்கு இப்போதே "சொல்லி வைத்தோம்!! அரங்கமா நகருளானே!**

என சொல்லி! நமோ நாராயணா! நமோ நாராயணா! நமோ நாராயணா! என மும்முறை அலறி, அழுது அர்ச்சணம், முடித்துக் கொண்டார். ஆனால் தெளிநிலையில், அவனைப் பாடித் தொழுதலல்லாது வேறொன்றும் அறியார். ஆனால் பிராரப்த தாவம்,




(5)

சஞ்சார காலங்களில், அவன் பொருள். அவன் செயல். அவனன்றி அணுவும் அசையாது. என்பதையும், உணர்வால் உணர்வு நிலையில் இருந்தார். குற்றம் குறை. பேதாபேதம், விருப்பு வெறுப்பு. இவைகளை அடியோடு ஒழித்தார். நான். என்னுடை. எனது, விட்ட நிலையில், இருந்தார். இந்நிலையில், மனம் பாரம் இல்லாமல் லேசாக இருந்த தன்மையினால், அந்திய காலத்தில், வினை வசத்தால், தூலம் நலிந்து நைந்து மெலிந்து, போகும்போதும், ஸ்ரீ பகவன் நாம ஸ்மரணை கெடாமல் இருந்தார். ஆனால் மரணகால அவஸ்தையால், முக்கல் முனங்கல் பரதவிப்பு, பார்ப்பவர் உள்ளங்களை திடு திடுக்க வைக்கும். காரணம்? பார்ப்பவர்களாகிய இவர்களிடம், மனம் வேலை பார்க்கிறது. (அதாவது ஓர் மகான், இப்படி அவஸ்தைப்படுகிறாரே, என்று எண்ணத்தான் தோணும்)
இங்கு கள்ள மனம், அனத்தும் முனங்கும் சஞ்சல பாவனை, தோற்றத்தான் செய்யும். ஆனால் நல்ல மனம்,



வெளியில் தோற்றமல், அவனை ஒன்றி இருக்கும். இதை அவர் ஒருவரே அறிவார். ஏனையோர் அறியார். இங்கு மனம், அழியாத்தன்மையால், இங்கு மனம் இரண்டுபடுகிறது. இங்கு இவருடைய, புண்ணிய தர்மத்திற்கு ஏற்றபடி, உயரிய பிறவியோ, பதமுக்தியோ, அவஸ்யம் உண்டு.

(உ) ஓர் ஸத்குரு மூலமாக, உணர்ந்த ஆத்ம ஞானம்:- இங்கு இவருக்கு, ஞானபாடத்தின் மூலம், இவருடைய தெளிநிலை, எப்படி இருக்கும் என்றால்? முன்கூறியவரின், பக்தி நிலையில், இவரும் ஸ்வய அனுபவம், பெற்ற நிலையில், இங்கும் இவரிடமும், முன்கூறிய நிலையில், இரண்டு மனம் உண்டு, என்பதும் ஸத்தியமே. ஆனால் ஸத்குருவின், வாக்கிய சிரத்தையினால், நாமரூப, உடல் உறவு பொருள் அநித்தியமே, பொய் என்ற தன்மையினால், மனம் இரண்டுபட்டாலும், நாமரூபம் பொய் என்றும், அந்த ஒன்றுக்கு அவை அன்னியமில்லை என்றும், அந்த ஒன்றே நாம் என்றும், நாமே அந்த ஒன்றென்றும், சுத்த "அத்வைத"





நிலை ஸ்வயமாகவே, வெற்றுவிட்ட தன்மையால்,
அவ்விரு மனமும் அழிந்து, மனத்தாகி விடுகிறது.
அங்கு மனம், அடங்குகிறது. ஆகவே பிறவி உண்டு.
இங்கு மனம் அழிகிறது. ஆகவே பிறவி இல்லை.
ஆனால் இங்கு, ஓர் விசேஷம், என்னவென்றால்?
வினை விதி வசத்தால், தாவம் நைந்து பிய்ந்து,
கடும் அவஸ்தைப்பட்டாலும், ஜீவன் முக்தியில்,
மனம் ஒன்றிய தன்மையால், முன் இவர் கேட்டு,
மனனம் செய்து, நிதித்தியாசம் (அனுபவம்)
பெற்ற நிலை, "அறிவு" பூர்வமாக, உள்ளே
பதிவேடாகி இருப்பதால், அது அதன் காரிய
த்தை, கவனித்துக் கொள்ளும்.

இங்கு?

மனம், புத்தி, சித்தத்தால், தருமாற்றம்
உள்ளதாக, (அவஸ்தைப்படுவதைப் போல்)
தோற்றினாலும், அவர் அவஸ்தைப்படுவதில்லை.
அவர் அறிவாகவே இருக்கிறார். ஆகவே ஜனனம்,
இல்லை யென்பதே ஸத்தியம், என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.



இங்கு ஓர் உண்மை என்னவென்றால்?
அதீதமான, அத்வைத ஞானமானது, அதிரகசியமாக
பாதுகாக்கப்பட்டு வருகிறது.
ஆனாலும் "பிரமாணமாக" சொல்கிறோம். சாதனை காலங்களில்,

(1) நான், என்னால், எனது, என்பது முழுமையாக,
அழிந்திருக்க வேண்டும்.

(2) நாமரூப ஜகத் ஜீவ, தோற்றம், இருப்பு, இயக்கம்,
ஸ்ரீபகவானுடையதே என்ற உணர்வு இருக்க வேண்டும்.

(3) சாதனை காலங்களில், எது நடந்தாலும், அங்கு
மனம், அசைவற்று இருக்க வேண்டும்!

(4) இவை அனைத்திலும், எல்லாம் (நாம ரூப,
ஜகத், ஜீவ சொரூபங்கள், ஈஸ்வராதிகள்) பிரமாகிய
மண்ணே என்றும், மண்ணாகிய பரமே என்றும்,
நாம் அதுவே! அதுவே நாம்! என்ற அத்வைத,
அனுபவ உணர்வு, மாறாமல் மறையாமல்,
ஸ்திரமாக இருக்க வேண்டும்.

(5) எதை எதை, எப்படி எப்படி, எங்கெங்கே, எந்
நிலையிலும், கண்டாலும், கேட்டாலும், பேசினாலும்,



உ


# "தத்வம்" அஸி!

என்றறிவியல், ஸ்ரீபரமாத்மாவாகிய, ஸ்ரீபகவானே நாம்! நாமே பரமாத்மாவாகிய ஸ்ரீபகவான்! நாமும் ஸ்ரீபகவானும், அதற்கு அன்னியமில்லை என்ற, "**பேரறிவின்**" மெய்யுணர்வு, அணுவும் குறையாமல், இருக்க வேண்டும்!

(A) மேலே கூறிய ஐந்தும், மாறாமல், மறையாமல், குறையாமல், நிறைவாக உள்ளே இருக்கும் பக்ஷத்தில் இந்த ஸத்திய உணர்வு, உள்ளே மாணிக்கம் போல், பிரகாசிக்கும்.

(B) வெளி சரீர தோற்றத்தில், அவஸ்தை தோற்றினாலும், அவை மற்றவர்களுக்காக, மாயா காட்டுகிறதென்று, அனுபவ ஞானிகள், சொல்லக் கேள்விப்படுகிறோம்.

(C) மரண அவஸ்தை காலங்களில், முக்கல் முனங்கல் இருந்தாலும், ஈன வாஸனை, வார்த்தைகள், அங்கு இருக்காது! இருக்க முடியாது! இருக்க இயலாது! அப்படி இருக்குமாயின், இவர் சாதனை சரியில்லை என்பது, ஸத்தியம் என, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.



இங்கு சில உண்மைகளை, உரைக்கிறோம். கவனம் தேவை

(1) தற்காப்பு சக்தியும், முற்கவன சக்தியும் கூடாது. தற்கவன சக்தி வேண்டும்!


(2) ஓர் சாதனையாளனுக்கும், மரண அவஸ்தை வரும் போது, வினையின் படி, சரீரம் நைந்து, மெலிந்து, மெதுவாக நலிந்து, தான் போகும்.

(3) அவனுடைய, இறைகுரு, உணர்வு. ஸத்தியமானவை. அவை, சில விடைகளே தோற்றும். அவை தானே, மாறும், மறையும்.

(4) அவனுடைய சாதனையின் பலன், அவனை உள்முகமாக காக்கும். வெளி முகத்தில், அதை எவர்க்கும், சொல்ல முடியாது. சொல்ல இயலாது. அது தேவையுமில்லை.

(5) அச்சாதகனுக்கு, இறை குரு உணர்வே, (பலகால பழக்க வழக்க நிலையில் (பேச்சு & செய்கை)) பலம் ஆகும். அதில் நம்பிக்கையும், வைராக்கியமும் வேண்டும்.

(6) அச்சாதகனுக்கு, அந்தர் யாமி (சாட்சி நிலை) சர்வாந்தர்யாமி (சர்வ சாட்சி) அதா அத் அதி ரகஸியமாக ரக்ஷிக்கும்!



(11)


(7) சரீர நலிவு என்பது, வெளிமுக தோஷம் (கலிதோஷ குணங்கள்) கொண்டது. அகத் துன்பம், வேதனை, கடும் அவஸ்தை, உள்முகமாக இருப்பதால், சாதனை காலங்களில், பொறுமை, அன்பு, கருணை, கனிவு, பணிவு இவை இருந்தால், பாதிப்பு நேராது!

(8) அகவுணர்வு, கெடாதிருக்க வேண்டுமானால், சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! சாதனை காலங்களில், உறுதி ஆக வேண்டும்.

(9) தன் உடல் மீதும், சொந்த பந்த உறவுமீதும், அதிக பிரியம், வைக்க வாகாது. அவரவர் வினையின் படி, ஒழுங்காக நடக்கும், என்ற உறுதி வேண்டும்!

(10) பற்று வரவு கழிகிறது, என்ற மெய்யுணர்வினால்தான், உபாதையில், வாய் வெளிமுகமாக, புலம்பாதும், அகவுணர்வு, ஆனந்தமாக இருக்க முடியும்.

(11) எல்லாம் அவன் செயல்! அவன் பொருள்! என்ற இந்த, ஒன்றினால் மட்டும், தூல அவஸ்தை, வெளியே பிறருக்கு தோற்றினாலும். அவன் அகஉணர்வோடு, இருக்க முடியும். இதை சொல்லவோ விளக்கவோ, எவராலும் முடியாது!





இனி உன் கேள்வியின் பதில்?

(1) தூல அவஸ்தைக்கு, மாற்று உபாயம் உண்டா?


பதில்:- சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! தான், அதற்கு மாற்று உபாயம், இவ்விரண்டும்; புறமுக உணர்ச்சியை, காட்டிலும்; அகமுக உணர்வைக் கொடுக்கும்! புற உணர்ச்சியை கெடுக்கும்!

(2) அம்மரண அவஸ்தையிலும், இறை குரு உணர்வுடன் இருக்க முடியுமா?

பதில்:- அவஸ்யம் இருக்க முடியும். இது ஜீவன் முக்தி என்ற, ஆன்ம ஞான சாதகர்களுக்கு, மட்டும் முடியும். அது "மறைபொருளாய்"! இருக்கும். எவரும் அறியவும் உணரவும் முடியாது.

(3) இப்போதுள்ள, இறைகுரு நாம ஸ்மரணை, அப்போது கைகொடுக்குமா?

பதில்:- அவஸ்யம் கைகொடுக்கும். இங்கு உன் இறை குருநாமஸ்மரணையானது, எந்த எதிர்பார்ப்பும்




13

இல்லாமல்
அதாவது வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம்
இல்லாமல்; எளிமையாகவும், பிறரைக் கண்டு
கொள்ளாமலும், முழு நம்பிக்கையுடனும்,
திட வைராக்கியத்துடனும் இருந்தால், அவசியம்
தை கொடுக்கும்!

எப்படி என்றால்?

(1) ஸ்ரீபகவான் சொரூபமானது, பக்தர்களுடைய
(நினைந்த வடிவில் கருதினும், அந்த வடிவில் தோன்
றுவார், (தமக்கென) சொந்த வடிவம் பெயரில்லா
நாமரூபம் இல்லாதவர்) சுத்த மோன சின்மயமாம்
எண்ணை உருதியினால், காவாந்த அதுவே
ஓர் வடிவம் தாங்கி, வருகிறது என்பதே பக்தியும்
அது செயல்படாது என்பதும்; அவன் செயல்படுவான்
என்பதுவும்; இங்கே பொருந்தும்.
இங்கு, மரண அவஸ்தை வரும்போது, உண்மையான
பக்தனுக்கு ஸ்ரீபகவன் நாமாவே பலமாகவும்,
பலனதவும் அமைவதால், டாக்டர் ஓர் மயக்க





ஊசிபோட்டு, அறுவை சிகிச்சையை, சுகமாக செய்வதுபோல; அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தோம்! என்ற மெய்யன்பர்களின், வாக்கை ஸத்தியமாக்கிக் கொண்டு,

அவஸ்தை, வெளியில் உள்ளவர்களுக்கு, தோற்றினாலும் அகவுணர்வில் தோன்றாவண்ணம், அவன் ரக்ஷையாக அமைவான். அச்சமயம், ஸ்ரீபகவன் நாமம் வந்தாலும், வரா விட்டாலும்; அதுபாதகமில்லை என்பதே, ஸ்ரீ பகவான் தீர்ப்பு என, ஸ்ரீமஹான்கள் சொல்லக் கேள்விப்படுகிறோம்!

இது பரமுக்தியாக அமைவதால், இதன் நிலை இவ்வளவுதான்.

(2) இந்த ஜீவன்முக்தியாகிய, பர முக்தியானது, எந்த நாமரூபமும் அற்றது! அது நமக்கு அன்னியம் இல்லாதது! அது நாம் நாமாகவே, உள்ள நிலையாகும்! மனதின் கவனக் குறைவால், நமக்கு நாமே, ஓர் தோற்றம், எடுத்துக் கொண்டோம். அத் தோற்றம், புண்ணியபாபம் என, பேசப்படுகிறது. முன் கூறிய நிலைகளில், அக்கவனக் குறைவை ஒழித்துவிட்டு, அறிவுசொரூபமாக இருந்து கொண்டு,



உ

(15)

"இறை, குரு, பரா" கருணையால்;

பொய்மை உணர்ந்து, இல்லையென தள்ளிய நிலையிலும்;
மெய்மை உணர்ந்து, அதுவே ஸத்தியம்; அதுவே நாம் என, உணர்ந்த நிலையிலும்; விதேக முக்தி என்ற நிலையில், தாவம் நழுவிப் போகும் நிலையிலும்; (மரணவஸ்தையிலும்)

(A) அவருக்கு, அவஸ்தை இல்லை என்பது ஸத்தியம்!

(B) மனதை, உடையவர்கள் காணும் நிலையில், "மன" மயபாவனையில், அவஸ்தை உண்டு என்பதும், அவர்கள் நிலையில், ஸத்தியமே!

(C) பயிற்சியில், பக்குவப்பட்ட, பக்குவ ஆன்மாக்களுக்கு, மனம் மறைக்கான தன்மையால், அவஸ்தை தோற்றமல், ஆனந்தம் ஒன்றே அங்கு தோற்றுவதும் ஸத்தியமே!


முதலாமவர், தாவத்தை விடுபவர்.
இரண்டாமவர், மனம் பக்குவப் படாதவர் (அஞ்ஞானி)
மூன்றாமவர், சாட்சிபாவனையில், உள்ளவர். (ஞானநிலை பெறுபவர்)



உ

# "பர உணர்வு"!

(1) பர தத்துவ வடிவமாக, திரண்டு உருண்டு
வந்து, அத்வைதத்தை உணர்த்தும், நிமித்தமாக
வந்தது :— காலம், தேசம், வர்த்தமானம்,
நாம, ரூப, குணம், குறி, மணம், வாக்கு, காயம்!
ஆகிய இந்த, பத்தினையும், தொட்டு உணர்ந்தவோ,
சுட்டிக்காட்டவோ, முடியாததான; ஆனால் வாக்
கிறைவ், சொல்லும் நிலையில், "பர" சொரூபமான
ஒன்று, தாமே தமக்கு, ஓர் வடிவம் தாங்கி,
வந்தது என, ஸ்ரீ அனுபவ மஹான்கள் சொல்வர்.
இங்கு "பர.தத்.துவம்"| என சொல்வது,
தத்.த்வம்.அஸி! என்பதையே, சற்று (இடம்) மாற்றிப்
போட்டிருக்கிறார்கள். என உணரவும். இங்கு
பர என்பது, அஸிபதமாகும்!
திரண்டு, உருண்டு வந்தது என்பது, தம் நிழ
லாகிய, யோக மாயாவை, தம்மோடு இணைத்து,
பிணைத்துக் கொண்டதாலேயே, தாம் ஓர்
உருவம் தாங்க முடிந்ததென்று ஞானிகள் சொல்வர்.



அவ்வுருவமும், பக்தர்களுக்காகவே, வந்ததாகும்!
அதுவே பக்தர்களுக்காக, ஸ்ரீபகவானாகவும்.
பாமரர்களுக்காக, நாமரூப உலகமாகவும்,
வடிவெடுத்துக் கொண்டது. பக்தன் வேறு.
பாமரன் வேறு அல்ல. இருவரும் ஒருவரே!
விளையாடும் நிலையில், பாமர வடிவக்கு,
நாமரூப உலகமாகவும். விளையாட்டு போதும்
என நிறைவு, பெற்ற நிலையில், பக்தன் வடிவு
க்கு, ஸ்ரீபகவானாகவும், அதுவே ஆகிக் கொண்டது.
விளையாட்டின் நிலையில், ரமிக்கும் போது,
அங்கு மனம் தேவை ஆகிறது.
விளையாட்டை போதும் என, நிறைவு செய்த
நிலையில், ஸ்ரீபகவான் தாமே என ஆகும் நிலையில்
அறிவு தேவை ஆகிறது!
பக்தனோ, பாமரனோ, உலகமோ, அனைத்து உயிரினமோ,
எல்லாம் ஒன்றே! அவ்வொன்றிற்கு, எதுவும்
அன்னியமில்லை, என்பதை உணர்ந்தவே,
அத்வைத ஆனந்தமும், தானே ஆனது!



உ



இங்கு பர தத் த்வம் என, என் போட்டார்கள்
என்றால்? அஸிபதமாகிய, பரசொரூபமே!
தற்பதமாகிய, ஸ்ரீபகவானைகவந்து, பின்காமே,
த்வம்பதமாகிய, ஜீவ சொரூபமாக இருந்து,
விளையாடுகிறதென்று, உணர வேண்டும்!
பிரமாணமாகச் சொல்லுவோம்:- இது
அதுவாகிய, பரமாத்ம! ஜீவாத்ம! விளையாட்டே
தவிர, வினையம் (வினை) இல்லவே இல்லை! ஆனால்
"வினை" என்றும், அவ்வினையின் "ஜீவன்"
என்றும், அச்ஜீவ இயக்க "மனம்" என்றும்,
மனமயக்க, "மாயா" என்றும், அம்மாயாவின்
அதிபதி, "ஈசன்" (ஸ்ரீ பகவான்) (விதி) என்றும்,
அறியாமையின், மாந்தர் புலம்புகின்றனர்
அது இல்லவே இல்லை! அது இல்லவே இல்லை!
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!!

—×—×—×—×—×—×—




(19)


உ பரசொரூப விளக்கம்
அனைத்தும் கற்பனையே!

பரசொரூபத்திற்கு, விளக்கமில்லை
யென்பதே ஸத்தியம்!

உ அறிவே ஆன்மா! ஆன்மாவே அறிவு!
காலாதீத பரசொரூபமும், அதன் நிழலாகிய
யோகமாயாவும், இணைந்து பிணைந்ததால்,
வாக்கிய விளக்கமாக, பரமே மண்ணாகவும்!
மண்ணே பரமாகவும்! ஓர் தோற்றம் உண்
டாக்கிக் கொண்டதை, உணர்வது அறிவாகும்!
அவ்வறிவே, உணர்ந்த நிலையில், பரமே
பரமாத்மாவாகவும், பரமாத்மாவே ஜீவாத்
மாகவும், ஜீவாத்மாவின், விளையாட்டுக்கூடமே
உலகமாகவும், விளையாட்டு பொருள்களே,
நாமரூப அனைத்து, தோற்றங்களாகவும்,
அத்தோற்றங்களை, வைத்து விளையாடும் நிமி
த்தமாக, மாயாமனதையும், தானே உண்டா
க்கியதென, உணர்ந்தால், அங்கு
அசையா நிலையில், ஸத்தாகவும்!
அசைக்கின்ற நிலையில், ஸித்தாகவும்!
அசைகின்ற நிலையில், ஆனந்த உலகாகவும்!



இப்படி மூன்று நிலைகளிலும், அதுவே தன்னைத்
தானே, ஆக்கிக் கொண்டதென்பதே. ஸத்தியம்.
ஆனால், அறியாமையின் மாந்தர், உலகம்
உண்டென்றும்; ஜீவன் உண்டென்றும்,
இன்பதுன்பம் உண்டென்றும். பிதற்றுகின்றனர்
அப்படி ஒன்றும், இல்லவே இல்லை! இல்லவே இல்லை.
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!
ௐ பயன்கருதா தன்மையால், மனம் தெளிவானது!
பயன் என்றால் எதிர்பார்ப்பு ஆகும். பயன் என்றால்
வியாபாரம் ஆகும்! பயன் என்றால் விளம்பரம் ஆகும்.
பக்தியோ! கர்மாவோ! செய் பயன் கருதினால்,
புண்ணிய பாபம் என்ற வினை நம்மைச் சாரும்!
பக்தியோ! கர்மாவோ! சர்வார்ப்பணமாகச்
செய்தால், புண்ணிய பாப வினை, நம்மைச் சாராது.
புண்ணிய பாப வினை, இல்லாத் தன்மையால்,
நாம் நாமாகவே இருப்போம். நாம் நாமாக
ஆத்மாவாக இருந்தால், நாமரூப, ஜகத் ஜீவ,
ஈஸ்வராதிகளின், தோற்றம் வரவும் முடியாது.






அத்தோற்றம் இருக்கவும் முடியாது!
அத்தோற்றம் இயங்கவும் முடியாது! மேலே சொன்ன தோற்றமும், இருப்பும், இயக்கமும், உண்டென்று, அறியாமையின் மாந்தர், புலம்புகின்றனர். உண்மையில் இல்லவே இல்லை.
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!

(4) எதிரும் புதிருமாக, நாமரூபம் தோற்றுவதால். வாக்கு வளர்ந்து, விரயமாகிறது. அங்கு வாக்கு உலகம், உண்டென நம்ப வைக்கிறது.

எதிரும் புதிருமாக (எதிர் என்றால் தோற்றம் புதிர் என்றால், சந்தேகத்தால் தோன்றும் கலக்கபயம்) தோன்றுவதை, ஏதேனும் ஓர் நாமரூபம், கொடுக்கும்போது, இது யார்? இது எப்படி, ஏன், எதற்கு வந்தது? இது என்ன செய்யும்? என்ற பல பல, கேள்விகளை உண்டுபண்ணி, களங்கத்தையும், களங்கத்தால், கலக்கத்தையும். கலக்கத்தால், பயத்தையும். உண்டுபண்ணி, அதை விகாரப்படுத்தி, அவ் விகாரதன்மையினால், விவகாரத்தை (பலபல பிரச்சனைகள்)







உண்டு பண்ணுவது இயல்பே!
அப்படி கண்கள் மூலமாக, மனம் காணும்
அனைத்தையும், நாமரூபமாக கற்பனை பண்ணுவதும்
எல்லாம் "மண்ணே"! என்றும்; இவை
அனைத்தும், நம் வினையின்படி, விதி தேவன்,
(ஸ்ரீபகவான்) செய்யும், ஓர் உபகார நாடகமே!
அவன் நடத்துவது, நன்மையேயன்றி, தீமையல்ல
என்று மெய்யாகவே உணர்ந்து, பண்டம் பரிவர்த்
தனம், (கொடுக்கல் வாங்கல்) ஒழுங்காக செய்யப்படுகிறது
என, உணர்ந்து கொண்டால் அங்கு விகாரமும்,
அதன் வியவகாரமும், இல்லாது ஒழியும்.
பேசிப் பேசியே, உலகுக்கு உயிர் கொடுப்பதால்,
நம் வாக்கை, குறைத்தால் போதும்.
வார்த்தையிலும்; அதன் விகார வியவகாரத்திலும்,
நம் அறியாமையால், சிக்கிய பாமரர்,
உலகம் உண்டு என்கின்றனர். ஆனால் இவ்
உலகம் இல்லவே இல்லை! பரமாகிய மண்ணே!
மண்ணாகிய பரமே! ஸத்தியம்! ஸத்தியம்!!
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!



உ

(23)

ந (A) பக்திபூர்வமான, பொருள் இல்லை!

(B) கற்பனையால், எண்ணும் பொருளும் இல்லை!

(C) சிந்தித்து சிந்தித்து, செயலாற்றும் பொருளும் இல்லை!

(D) வாக்கால் விவகரிக்கும், பொருளும் இல்லை!

(E) எனது என, சொந்தம் கொண்டாலும், பொருளும் இல்லை!

(F) மேலே கூறிய நிலைகளில், தொடர்கின்ற துவைத பயமும் இல்லை!

சத்தியம் ஒன்றே! உண்மை! அதுவே நாம்!

---

(A) நாமரூபமாக காணும், பக்திபூர்வமான, எப்பொருளும் இல்லை! எல்லாம் மண்ணே!

(B) ஒன்றை, பலபல வாக, கற்பனை பண்ணும், எப்பொருளும் இல்லை! எல்லாம் மண்ணே!

(C) எண்ணி எண்ணி, மனதை அழுத்தி புண்படுத்தும், எப்பொருளும் இல்லை! எல்லாம் மண்ணே!

(D) வாக்கால், விகாரம் அடைந்து, விவகரிக்கும் எப்பொருளும் இல்லை! எல்லாம் மண்ணே!


(E) நாமரூப, தோற்றம் உண்டானால், அதை சொந்தம் கொண்டாடுவதும், அதைபந்தப்



உ

(24)


படுத்துவதும், அதனால் பற்று உண்டாவதும்.
அப்பற்றால், புண்ணியபாப வினையும், அவ்வினை
யால், ஜனன மரணம், உண்டென்று அறியா
மையின், மாந்தரால், பேசப் படுகிறது.
நாமரூப தோற்றம், உண்டானால் தானே,
இத்தனை "பிரச்சினைகளும்" உண்டாகும்.
எல்லாமே பரமாகிய மண்ணே! ஆகவே இங்கு,
(F) நமக்கு அன்னியம், எவையும் இல்லாத்
தன்மையால், "துவைதபயம்"!
எவையுமே இல்லை! ஸத்தே ஸித்தாகி!
ஸித்தே சித்தமாகி, விளையாடியதென,
சாஸ்திரங்கள், சொல்கின்றன. அதனால்
ஆனந்தம் உண்டென்றும், பேசப்படுகின்றன.
உண்மையால் எதுவும், வரவும் இல்லை. எது
போகவும் இல்லை. சஞ்சலமற்ற (அசைவற்றதும்)
பிரம்மமாகிய மண்ணே! மண்ணாகிய பிரம்மமே
இருக்கிறது! இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!



௨௫

6 காண்பான் இல்லாததனால், காட்சி இல்லை!
காட்சி இல்லாததனால், காண்பவன் இல்லை.
காண்பானும், காட்சியும், இல்லாமையினால்.
நனவு! கனவு! சுஷுப்தி! இம்மூன்றும் இல்லை!
இம்மூன்றும், இல்லாமையினால், ஜனனமரண
இல்லை! தன்னையன்றி, மற்றொன்றும்
இல்லாமையால், பந்தஜீவனும் இல்லை! ஜீவன்முக்தியும்
இல்லை!

காண்பவன் என்பது, இங்கு மனம் என பேசப்படுகிறது.
மனம் இல்லாத் தன்மையினால், நாமரூப காட்சி
இல்லவே இல்லை!
அப்படி இருந்தாலும், ஒருபிரயோஜனமும் இல்லை.
நானும் மனமும் காட்சியின் உலகமும்!
இல்லையென்றாகும் போது, விழிப்பு ஏது?
கனவு ஏது? ஆழ்ந்த உறக்கம் ஏது? இம்மூன்
றும் இல்லையென்றாகும் போது, மருட்சியாலும்
மிரட்சியாலும், சிக்கும் ஜீவன் ஏது? ஆகவே,
ஜனன மரணமும் இல்லை. அதன் நிவர்த்தியான
ஜீவன்முக்தியும் இல்லை! இவை அனைத்தும், உண்டென்று
அறியாமையின், மாந்தர் பிதற்றுகின்றனர். ஆனால்
இருப்பது ஒன்றே! நடப்பது நவமே!




(26)

(7) ஸ்ரீபகவான் கருணை, பெருகு தன்மையினால், கள்ளமனம் தோன்றியது!

நல்லமனம்:- பொறுமை! அன்பு! கருணை! பணிவு! கனிவு! சாந்தி! அமைதி! ஆனந்தம்! நம்பிக்கை! வைராக்கியம்! ஆகிய இந்த பத்தும் நல்ல மனதின் பிறப்பிடமும்! இருப்பிடமும்! இயக்க நிலையும்! ஆகும் அதுவே, "சாட்சி பாவனையின், ஸ்ரீபகவத் நிலையாகும்!

கள்ளமனம்:- போட்டி! பொறாமை! விரோத குரோதம்! கோபாவேசம்! மோஹவேக காமம்! பட்டம் பதவி (பணம்) மோஹம்! லோபம்! சந்தேகம்! இனமத வெறி! குற்றம் குறையாகவே காண்பதும், கேட்பதும், பேசுவதும், இதனால் சஞ்சலம் அடைவது! ஆகிய இந்த பத்தும், கள்ளமனதின், பிறப்பிடமும், இருப்பிடமும்! இயக்க நிலையும் ஆகும்!


இவை இரண்டுமே "மனதின்" சேகரிப்பாகும். இவை பூர்வகர் மாவினையும், தற்காலிக பழக்க வழக்கங்களையும் இயல்பாகவே தோன்றிவிடும்.





இங்கு நல்ல மனம், நமக்கு தேவை என்றால்,
எல்லாம் ஸ்ரீ பகவான் பொருள்! எல்லாம்
ஸ்ரீ பகவான் செயல்! நம் தாவும் ஓர் பதுமையே!
என்ற "சர்வார்ப்பணம்" ஒன்றால்தான்,
நல்ல மனம் பெற முடியும்! வேறு எந்த சாதனை
யாலும், நல்ல மனம் பெற முடியாது என்பதே,
ஸ்ரீ அனுபவ மஹான்களின், வாக்காக இருக்கிறது.
இந்த சர்வார்ப்பணத்தினால், நல்ல மனம்,
ஸ்ரீ பகவான் கருணையினால், பெற்றால் தான்,
வினை சாம்பல் ஆகும்! வினை சாம்பல் ஆனால்,
விதேகமுக்தி, இயல்பாக பெற முடியும்.
ஸ்ரீ ஸத்குரு திருவருளினால், பிரம்மார்ப்பணம்,
பெற்றால்தான், அந்த நல்ல மனமானதும், அழிந்து,
அதாவது, அறிவு பேரறிவாக மாறி, (மனம் மறக்கா கி)
அகண்டான்ம பாவனையை, பெற முடியும்.
ஆனால் அறியாமையின் மாந்தர், கர்ம மனம் வசம்
சிக்குண்டு, இவ்வாறு உலகை, திருப்புடையதாக,
கற்பனை பண்ணி, மனதால் கெடும் அவதியுறுகின்றனர்.
எல்லாம் பரமாகிய, மண்ணே என்றும். மண்ணாகிய
பரத்திற்கு, எதுவும் அன்னியமில்லை, எனத் தெரிந்து
இருப்பது ஒன்றே, நடப்பது நலமே! உணர வேண்டும்!

—x—x—x—x—x—x—x—x—



## (8) ஸித்தில் தோன்றியதே சித்தம்!

எல்லாம் ஸித்தாக உணர்ந்தால், சித்தம் இல்லை!
எல்லாம் சித்தமாக கண்டால், ஸித் மறைந்து விடும்!

---


ஸத்தில் இருந்தே, ஸித் தோன்றியது.
அசையா நிலையில், ஸத்தாகவும்! அசையும் நிலையில் ஸித்தாகவும், அந்த ஒன்றே இருக்கிறது.
அசையும் ஸித்தே, அசைக்கும் சித்தம் என ஆனது!
இதற்கு உதாரணம், தருவது என்றால்?

| ஸத் | ஸித் | சித்தம்! |
|---|---|---|
| மண் அசையாதது! | பொன் அசையும் நிலை! | ஆபரணம் அசைக்கும் நிலை! |
| பஞ்சு அசையாதது! | நூல் அசையும் நிலை! | வஸ்திரம் அசைக்கும் நிலை! |

இதேபோல் உலக நிலையில்?

| | | |
|---|---|---|
| மண் அசையாதது! | ஜலம் சேர்ந்த களிமண் அசையும் நிலை! | பாண்டம் அசைக்கும் நிலை! |

இப்படி இன்னமும், நிறைய விளக்கம் கொடுக்கலாம்.
மரமாக கண்டால், யானை இல்லை! யானையாக கண்டால் மரம் இல்லை!
கல்லாக கண்டால், நாய் இல்லை! நாயாக கண்டால், கல் இல்லை!
பொன்னாக கண்டால், ஆபரணம் இல்லை! ஆபரணமாக கண்டால், பொன் இல்லை. இதேபோல் இன்னமும், அநேகம் சொல்லலாம்.






ஸத் என்றால் செயலற்ற நிலை! ஸித் என்றால்,
செயலின் ஆக்க நிலை! சித்தம் என்றால் செயல்படும்
இடத்து மண்! பொன்! ஆவரணம்! என்னும் நிலை
இம்மூன்றையும், சொல்லலாம்!

ஸத் என்றால் **நாமம்** ஒன்றே உண்டு!

ஸித் என்றால் **ரூபம்** என ஒன்றுண்டு!

சித்தம் என்றால், நாம ரூபம், இரண்டும் அசையும் ஒன்று!

மனம் என்றால், நாமரூபம் இரண்டையும், அசைத்து
செயல்படுத்தும், (குணத்திரயம்) கொடுக்கும் ஒன்று!
இப்படி மூன்று நிலைகளிலும், அந்த காலாதீத
ஒன்றே, செயல்படுத்திக் கொண்டு, தான் செயல்
படாதது போல், சும்மாவே சுகமாக இருக்கிறது!
மனமடைந்தவர்களுக்கு, செயல்படுவதாகவும்,
செயல்படுத்துவதாகவும், கற்பனையில் தோற்றும்.
மனம் மறைந்தவர்களுக்கு, செயலும் செய்விப்பதும்
இல்லவே இல்லை! சாந்தமாகிய பரமே! பரமாகிய
ஒன்றே, எக்காலமும் உண்டு. என்பதே சத்தியம்!
ஆகவே இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!



ஓம்

௧ இருகுணமும் இழந்து, ஒரு குணமானால்,
ஸ்ரீ பகவானைக் காணலாம்!
அவ் ஒரு குணமும் இழந்து, குணாதீதமானால்,
நாம் நாம் ஆகலாம்! (நாம் அது ஆகலாம்)

முக்குணங்களால், வினைகள் சேர்கின்றன!
வினைகளால், புண்ணிய பாபம், சேர்கிறது!
புண்ணிய பாபங்களால், ஜனன மரணம் உண்டாகிறது!
இம்முக்குணங்களில், ஒன்று ஸத்வ குணமாகும்!
மற்றும் ரஜஸ், தமஸ், என்ற இருகுணங்களால்,
மனித குலத்தில், தாழ்வான (ஈனமான)
ஜனனமும், மற்றும் உயிரினங்களாகவும், ஜனனம்
உண்டாகும். ஸத்வ குணம், ஒன்றில் மட்டுமே,
வசதியான ஜன்மாவும், பத முக்திக்குரிய,
ஜன்மாவும் பெறலாம்.
இந்த ஸத்வ குணம், ஒன்றுவேயே, ஸ்ரீபகவானைத்
தரிஸிக்கும் நிலையும் பெறலாம். ஸ்ரீபகவானைக்
காணும். நிலை, பெறவேண்டுமானால், ஓர் அன்பர்
வாக்குப்படி :- எங்கும் உள்ள கடவுளை, உன்
இதயக் குகையில் காணலாம். இங்கு கண்ட
பிறகுதான், இருப்பதெல்லாம் அவன்மயம்!






என்ற அனுபவ நிலை பெறலாம். ஃ எறும்பு முதல், அனைத்து ஜீவர்களுள்ளும், அந்த ஸ்ரீபரமன் நிறைந்திருக்கிறான். என்ற பேருணர்வு பெற வேண்டும். இதற்கு ஒரே வழி:-

"நாம் நம்முள் அடங்க வேண்டும்.

எவரையும்! எந்நிலையிலும்! எக்காலத்தும்! எக்காரணம் கொண்டும்! "அடக்க வேண்டாம்.

இதனால் எல்லாம், உன்னுள் அடங்கும்! அங்கு ஸ்ரீபரமனும், உன்னுள் அடங்குவான்! அங்கு எந்த எண்ண வடிவம், ஸ்ரீபகவானுக்கு, நீ கொடுக்கிறாயோ, அவ்வடிவில், ஸ்ரீபகவான் தோன்றியே ஆகவேண்டும்! அப்படி இல்லையேல், கடவுள் இல்லை யென்றாகிவிடும்! உன்னுள் உணர்ந்த பின், அவனே நாம்! நாமே அவன்! என்ற நிலை பெறலாம் அந்நிலையை, ஸத்குருகிருபையால் பெற்ற பின், எல்லாம் மண்ணாகிய, பரம் என்றும். பரமாகிய, மண்ணே என்றும். பூர்ண நிலை பெறலாம். அங்கு இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!! என ஆகும்.

—x—x—x—x—x—x—x—x—



௩௨


10 எங்குமாய், நிறைந்த பூரணப் பிரம்மம் அல்லால் ஓர் அணுவும், எங்கும் எதிலும் இல்லை! யென்ற "அகண்ட" பரபாவனை, செய்வதல்லால், மனதை அழிக்க முடியாது!

---

ஊசி நாட்ட, இடமே இல்லாமல் அந்த ஒன்றே எங்குமாய்! ஏகமாய்! எதிலுமாய்! நிறைந்து, அதுவே நாமாய்! நாமே அதுவாய்! நிறைந்து, இருக்கிறோம் என்ற, பர பாவனை செய் என்கிறார்.

இதன் காரணம்?

மாயாவின் சாதனை, அண்ட, ரண்ட, பிண்ட, பிரம்மாண்ட, சராசரங்களை உண்டு பண்ணியதோடு சரி! மாயா மனதின், வேதனை அப்படி தோன்றிய தோற்றத்தில், தேவையையும் ஆசையையும் மாற்றி, மாற்றி, பிணைத்து இணைத்து "நாமரூபங்கள்" உற்பத்தி, பண்ணிக் கொண்டு, எதிர்பார்ப்பே, மாற்றமாய்! மாற்றமே தடுமாற்றமாய்!





அத்தடுமாற்றத்தால், பற்பல, கோர குணங்களுக்கு ஆளாகி, அதுவே வினைத் தொடர்பாய், அதுவே ஜனனமரணங்களாய், பின்னிக் கொண்டு இன்பத்தையும், துன்பத்தையும், மாறிமாறி, கொடுக்கிறதென்று, பாமர மக்கள், அரற்றுகின்றனர். அது இல்லவே இல்லை.

வசிஷ்டர் வாக்கு:

ஜனனமும் இல்லை! மரணமும் இல்லை!

இன்பமும் இல்லை! துன்பமும் இல்லை!

இன்பதுன்பமென்னும், சுழலில் சுழல்பவர்களும், இல்லவே இல்லை! இல்லவே இல்லை! இல்லவே இல்லை!

"ஒன்று" எப்போதும் இருக்கின்ற வஸ்துவே, இருக்கிறது. ஆகவே, போவதையும், வருவதையும், பற்றி சிந்திக்காதே, கவனிக்காதே, பார்ப்பதையும், கேட்பதையும், அது பற்றி பேசுவதையும், "குறைத்து, குறைத்து, நிறுத்து"

இருப்பது ஒன்றே, நடப்பது நவமே என உறுதி செய்!




(௩௪)

(11) வாய் ஞானம் வேண்டாம்!
அனுபவ ஞானம் வேண்டும்!

(1) நான், என்றல், எனது, விடவேண்டும்!
குற்றம் குறை இனி காண வேண்டாம்!
பேச்சை குறைக்க வேண்டும்!
சொந்த பந்த, உறவு சுற்றமாக, இனி காணவேண்டாம்
எல்லாவற்றிலும், ஸ்ரீபகவானை காணவேண்டும்!
,, ஸ்ரீபகவான் செயலாக உணரவேண்டும்!
எல்லாவற்றையும் ஸ்ரீபகவான் பொருளாக, உணர வேண்டும்
இப்படியே, சாதனையின் வழி முறைகளை, பேசிப்பேசியே
"வீண் காலம்" கடத்துவது வாய்ஞானமாகும்

(2) நான் என்றல் எனது, முழுமையாக விட்ட
நிலையில், பொறுமை, அன்பு, கருணை, பணிவு,
உள்ள நிலையில், எதையும் அமைதியாக,
ஏற்றுக் கொண்ட நிலையில், எல்லாம் நலமே!
எல்லாம் நலமே! எல்லாம் நலமே! என்ற
அனுபவ நிலையில் "அடங்கி" இருப்பது
அனுபவ ஞானமாகும்!



(35)


மேலே கூறிய அனுபவ நிலையில் தான்

(12) (A) கெடுக்கின்ற சித்தம் இல்லை.
(B) தோற்றத்தால் மயக்கும், ஜகமும் இல்லை.
(C) பிறவி வித்தாகிய, அஹங்கார மமகாரம் இல்லை.
(D) உபாசி நாட்ட இடம் இல்லாமல், எங்கும் சர்வ வியாபகமான, பிரம்மம், ஒன்றே உள்ளது.
என்ற உணர்வோடு, ஹரிதுயில் கொள்வாயாக.

---

(A) வாய் ஞானம் இல்லாமல், அனுபவ ஞானம் பெறும் போதுதான், சித்தமானது "ஸித்" சொரூபமாக மாறும். அங்கு சித்தத்தின், அசைவு முழுமையாக, நின்று விடும். அங்கு நாமரூபம், அனைத்துமே, ஜகத்தாக தோன்றாது! அனைத்தும் மஹத்தாக தோன்றும். அனைத்தும் பூரணமாகவே தோன்றும்.

(B) நாமரூப, ஜகத் இல்லையானால், அவைகளை எனது என, சொந்தம் கொண்டாடும், ஜீவர்களும் இருக்க முடியாது! இருக்க இயலாது! அங்கு அனைத்து ஜீவ வேஷங்களும், அனைத்து தோற்றங்களும் பரமாகிய பூரணமாகவே மாறிவிடும். மாறியே ஆகவேண்டும்! காரணம்? அங்கு, விகாரம் அடையும் மனம்! புத்தி! சித்தம்! ஆகிய இம்மூன்றும்,




இயல்பாகவே மறைந்து, அறிவாகவும் அவ்வறிவே, பேரறிவாகவும் மாறிவிடும்.

உ ஆகவே அங்கு, அஹங்காரமும்! அதிகாரமும்! ஆதிக்கமும்! அபிமானமும்! இல்லாது ஒழியும்! அங்கு முக்குணமும் அற்று, நிர்குணம் இயல்பாகவே பெறமுடியும்.

D நாமரூப ஜகமும், அதை ஆட்டுவிக்கும், கோர குணங்களும், ஒழிந்து நாசமானால், அங்கு எந்த இயக்கமும், இல்லாத் தன்மையால், அகண்டான நிலையாகிய, அகண்டபாவம், இயல்பாகவே சாத்தியமாகும். இந்நிலை கூடிவிட்டால், ஊசிநாட்ட இடம் இல்லாமல், எங்குமாய்! ஏகமாய்! எல்லாமாய்! அந்த "ஒன்றே" நிறைந்திருக்கிறது என்ற "பர" உணர்வு சாத்தியமாகும். இதுவே முடிந்த முடிவாகும்! அந்நிலையில் தான், "அறிதுயில்" எனச் சொல்லும், தூங்காமல் தூங்கும் நிலை, சாத்தியமாகும். இவ்வனுபவமே, இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! எனவாகிவிடும்!

—×—×—×—×—×—×—×—








(13) எல்லாமே பிரம்மம் என்ற, அகண்டான்ம பாவனை செய்து வந்தால், மனோநாசம் ஆகும்!
அங்கு சொல்ல முடியாத, விளக்க முடியாத, ஓர் பரவச நிலை உண்டாகும்! அதுவே "பர" நிலையும் ஆகும். அதுவே சும்மா இருக்கும் நிலையுமாகும்!

---

எல்லாமே பிரம்மம், என்ற நிலை, எப்படி ஏற்படும் என்றால்:— நாமரூப, குணதோஷ, சொரூபங்களை இல்லையெனத், தள்ளிறவன்று, தூலபாவனை, தொலையவும் செய்யாது. சாட்சிபாவனை கூடவும் செய்யாது. இத்தாவ, துவைத பாவனையானது, ஓர் தொற்று நோய் போன்றதாகும். நாமரூப உலகை, எனது என்றால், இத்தொற்று நோய், வேகமாக பரவும். நாம ரூப, உலகை உனது, என்றால் அந்நோய்க் கிருமி, பரிபகவானை, தாவிப் பிடிக்கும். அவனை "நத்த (குரு)" சம்பந்தம், இல்லாது வளரும். அவன் சூட்சும, சொரூபியாகும்.



(38)

அவன் உன் எண்ண வடிவமானவன். உன்
எண்ணமே, அவன் வடிவமாக இருப்
பதால், எண்ண வடிவமான, ஸ்ரீபகவானிடம்,
எல்லாம் உனதே என்ற, எண்ண வடிவம்
அவஸ்யம், போய்ச் சேர்ந்தே ஆக
வேண்டும். அதுவே விதி! அதுவே நியதி!
சூட்சும எண்ணத்தால், தோன்றியவன்!
சூட்சும கற்பனையின், சமர்ப்பணை ஒன்றும் செய்ய
முடியாது! ஒன்றும் செய்ய இயலாது! காரணம்
அந்த ஒன்றே, சூட்சுமமோ! இயக்கமோ! அற்றது.
ஆனால் உன் கற்பனை, சொரூப ஸ்ரீபகவானே சூட்சுமமும்
இயக்கமும் "தம்மாயாவிலைல்"
உடையவனாகும்.
இங்கு உன் உடலோ, வினைசம்பந்ததாயாகும்.
இங்கு நீ தொட்டு, அனுபவிக்கும், எந்த
நாமரூப பொருள்களும் தாவ சம்பந்த
இங்கு உன், வினை உடலும்; நீ தொடும் போகும்



உ

(39)

பொருள்களும், "மண்ணே" ஆகும்!

மண்ணாசைப்பட்டேனே! மண் உண்டு போட்டதடா! என்று எம், ஸ்ரீ பட்டினத்தார் வாக்குப்படி "மண்" மண்ணாகிறது!

சூட்சுமம் சூட்சுமத்தோடு, இணைந்து கலந்து விடுகிறது. ஆகவே இங்கு, உன் சர்வாங்க பணம் என்ற, சூட்சும எண்ணமானது, எப்படி முடிகிறது என்றால்?

சூட்சுமத்தோடு, சூட்சுமம் கலந்து கறைந்து மறைகிறது!

தூலத்தோடு தூலம் மண்ணோடுமண் கலந்து "மண்" என்ற பரமாகவும் "பரம்" என்ற மண்ணாகவும் ஆகி, ஆகு ஆகி விடுகிறது.


இந்த தோஷ குணங்களோ, நான், என்னை, என்னுடையது! எனபாவனை. செய்தால், உன் தூலமாகிய, மண்ணில் குருதி (ரத்தம்) என்ற ஜலம் (பசை) இருப்பதால், ஈரவாசிக்ககால்



உ



தூசி ஒட்டுவதைப் போல், நன்றாக ஒட்டிக்
கொள்கிறது. அதுவே "தொற்றுநோய்"
கிருமி ஆகும் என, மேலோர்கள் சொல்வர்.
நீ உன் வினை விதிவசத்தால், எத்தனை
தூலம் எடுத்தாலும், அவை ஒழிந்து நாசம்
ஆவதில்லை. ஆகவே ஓர் சாதகன்
ஆரம்பத்தில்:- சர்வார்ப்பணம் (எல்லாம் நீயே!
எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே!)
செய்தே ஆகவேண்டும். இதனால் தொற்றுநோய்,
தூலத்தில், பற்று நீங்கப் பெறுவாய்!
முடிவில்:- பிரம்மார்ப்பணம் (எல்லாம் ஒன்றே!
அது சிவமே! அது நலமே! அது யாமே! யாமே அது)
என "முடிவுறும்" போது, வினையின்,
அசுத்தம் இல்லாத் தன்மையினால், பிரம்மார்ப்ப
ணத்தில், கலந்து கரைந்து விடும்! இப்படி பிரம்மா
ர்ப்பணம் செய்யும் போது, மண் மண்ணாகி விடும்!
சூட்சும எண்ண மனம், சூட்சும பகவானுடைமையாகும்!
நாம் நாமாக, நேர், இருப்போம். இந்த
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்பது சத்தியமா
கும்!



(41)

(14)

மனதின் தொழிலே தொழிலாகும்!
உடலின் தொழில் தொழிலல்ல!

---

ஸங்கல்பமே உலகம்! ஸங்கல்ப ரஹிதமே மோக்ஷம்! இதுவே ஸத்தியவாக்காகும்! இங்கு ஸங்கல்பம் என்பது, மனதின் காரியமாகும். இங்கு மனதின், வடிவம் ஸங்கல்ப விகல்பம் ஆகும். அதாவது மனதின் வடிவம், ஸங்கல்பத்திறல், வரும் "**குற்றம் குறையாகும்**"!

குற்றம் குறையே மனதின் வடிவமாகவும்! மனதின் இருப்பும் இயக்கமுமாக இருப்பதால். மனம் இல்லாமல், நாமரூப, உடல் உலக பொருள்கள் இருந்தும் அவை, இல்லாததே! இல்லாததே என்றால், வெறும் "**ஜடமே!**" ஜடத்திற்கு, ஸ்பாவமான இயக்கம் இல்லை, என்பதே ஸத்தியம்!

ஆகவே மனம் எண்ணுகிறது, உடல் செய்கிறது. அதாவது கயிறு (மனம்) ஆட்டுகிறது. பம்பரம் (உடல்) ஆடுகிறது.
(ஆட்டுபவன் ஸ்ரீ பகவான்)




(௪௨)

உ

வினையை தேடுவது மனம்.
வினையை எண்ணத்தால்
தேடுகிறது. அவ்வினையை
அநுபவிப்பது உடல்.
எண்ணத்தால் வரும்
சோதனையும், வேதனையும், உடலுக்கே!

"வினை" யென்ற உடலின், நிலையறிந்து "மனம்" என்ற கயிற்றை வைத்து "விதி" என்ற, ஸ்ரீ பகவான் ஆட்டுகிறான், என்பதே ஸத்தியமாக இருப்பதால் மனதின் செயலே செயல்! உடலின் செயல் செயலல்ல.

மேலும் வினை உடலுக்கு, வினையை சேகரிப்பதே மனமாகும்! வினையை சேகரிக்கும், இந்த மனம், அவ்வினையை, உடல் மூலமாகவே, செய்து முடிக்கிறது. அதனால் தான், எம் பட்டினத்தடிகள் சொன்னார்:— வினைப் போகமே, ஒர் சரீரம் கண்டாய். வினைதான் ஒழிந்தால், இமைப் போதளவும், (கண் இமைக்கும் நேரம் மட்டும்) நில்லாது கண்டாய்! என்றார். ஆகவே, "வினை" என்றால் உடல்! இயக்கம் என்றால் "மனம்" என, வொருள்வகை. இதற்கு ஓர் சிறிய, உதாரணம்:— ஓர் சந்நியாசி "துறவு" வேஷம் அணிந்திருந்தார். ஓர் விலைமாதை, (தாசியை) திருத்துவதற்கு, தம்



(43)

கவனத்தை, முற்கவனமாக திருப்பினார்.
அதனால் தற்கவனத்தை இழந்தார்.

அவ்விலைமாதாகிய, தாசியோ நாம் கெட்டுப் போனோமே! நம்மால் திருந்த முடியவில்லையே!
என்று மனம் உருகி தம் தவறுக்காக வேண்டி, அழுது அழுது,
தற்கவன சக்தியுடன், இருந்தாள். இவ்விருவரும், ஒரேநாளில், தாவத்தை விடுகின்றனர்.


(1) எண்ணத்தால், தாசியை எண்ணி எண்ணி, அதையே பதிவு ஏடாகிய சந்நியாசி, நரகம் செல்கிறார்.

(2) எண்ணத்தால், உயர்பவனை, எண்ணி எண்ணி, அந்த நல்ல எண்ணமே, பதிவு ஏடாகிய தாசி, சொர்க்கம் செல்கிறாள்.

(1) பூலோகத்தில், உடலால் சந்நியாசமாக இருந்த தன்மையினால், அவ்வுடல் பலமரியாதைகளுடன், சமாதி என செல்கிறது.

(2) ஈனமாக வாழ்ந்த, தாசியின் உடல், நாய் நரி, பறவைகளுக்கு, உணவாகிறது.

அங்கு உள்ளத்தால் இழிவான நிலை!
அங்கு உடலால் உயர்வான நிலை!
இங்கு உள்ளத்தால் உயர்வான நிலை.
இங்கு உடலால் இழிவான நிலை.



இதிலிருந்து, என்ன உணர்கிறோம் என்றால்?

"சிரேஸ்டம்" (சிரேயஸ்) விரும்பிய மனம், மேல் நோக்கி சென்று, பத முக்தியையோ, பர முக்தியையோ அடையும்.

"பிரேயஸை" அனுபவித்த உடல், கெட்டு மண்ணோடு மண்ணாகிறது. (அழிநிலை பெறுகிறது).

ஆகவே, உடல் மேல் கவனம் வைக்காமல், மனம், மேல் நோக்கிச் சென்றால், நலம் பெறலாம்.


ஆகவே

புண்ணியபாவங்களுக்கு { மனமே காரணம் ஆகிறது.
உடல் காரணம் அல்ல.

இங்கு, நாமரூப, உடல் உள்பட, பொருள்கள் அனைத்தும், பரமாகிய மண்ணே என்றும்; மண்ணாகிய பரமே என்றும்; "வீடு" மனதால் உறுதி செய்து, மேல் நோக்கிச் சென்றால், ஜீவன் முக்தி பெறலாம்.

இந்நிலையில், இருப்பது ஒன்றே, நடப்பது நலமே, என உணர்

(15) நனவின் பொருள், கனவில் இல்லை.
கனவின் பொருள், நனவில் இல்லை.
நனவில் பொருள்களை, நாம் நாடிச் செல்கிறோம்.
கனவில் பொருள்கள், நம்மை நாடி வருகின்றன.




நனவின் பொருள்கள், தூலமாகவும், நம் உடலும் தூலமாகவும் இருப்பதால், நனவின் சம்பவம், வினைத் தொடர்பாகிறது. ஆகவே, வினைசம்பந்த பொருளை, நாம் நாடி தேடி ஓடி, சென்று அடைகிறோம்.

கனவின் பொருள்கள், சூக்ஷ்மமாகவும், நம் மனஉடலும், சூக்ஷ்மமாகவும் இருப்பதால், மனஉடலைத்தேடி, மன எண்ணப் பொருள்கள், நம்மை, நாடி தேடி ஓடி, வருகின்றன! இதனால் இந்த கர்மாசம்பந்தம், இல்லாமல் ஒழிகிறது!


நனவின் பொருளும், அதை அடைந்து, அனுபவிக்கும் நாமும், "தூலமாக" இருப்பதால் கர்மா சம்பந்தம் தொடர்கிறது!

இதன் முக்கியம் என்ன வென்றால்?

ஒன்றுடன் ஒன்று, பிணைந்து இணையும் போது, "மென்மைக்" ஒன்று, வந்தே ஆகவேண்டும். அதுவே, நாமரூப கற்பனை, சொரூபமான உலகம் ஆகும்! நம் ஆழ்ந்த உறக்கத்தில்; நம்முடைய,



ஆத்மாவும், நம் மாயா மனமும் :- இணைந்து
பிணைகிறது. அதுவே கனவின், நாம ரூப,
உலக பொருள்கள் ஆகிறது! அங்கு
பொருள்களும் சூட்சமம்! மனமும், எண்ண வடி
வின் சூட்சமம். ஆகவே அங்கு பசை என்ற,
"குரு" இல்லாத்தன்மையால், கர்மா இல்லை!
நனவில் நாம், தேடிச் செல்லும், உடல் தூலம்
அது குருகி சம்பந்தம், கொண்டதாகும். நம
அனுபவ பொருள்களும், தூலம் ஆகும். ஆனால்
இங்கு நாடும் உடலும்! தேடும் பொருளும்,
தூலமாக இருந்தாலும், அது வெறும் "ஜடமே"!
(அறிவற்றதே) ஆனால், இவ்விரண்டையும், சேர்த்து
இணைத்து பிணைப்பது, மாயா மனம் ஆகும்!
மனம் மாயாவாகவும், எண்ண வடிவமாகவும்,
இருப்பதால், இதற்கு வினைகளை இணைக்கும்
"பசை" உண்டு என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.
இங்கு இந்த மாயாமனம், இல்லையானால்,





நாமரூப, உலக பொருள்களுக்கோ
தூல உடலுக்கோ இருப்பும், இயக்கமும்,
இருக்க முடியாது, இருக்க இயலாது. ஆகவே,
தான், இங்கு எண்ண வடிவில், எல்லாமே
இயங்குவதால், புண்ணிய பாவ நிலையில்,
ஜனனமரணம், தொடர்கிறது என உணரவும்.
இம்மாயா மனமானது, சர்வார்ப்பணத்திலும்
பிரம்மார்ப்பணத்திலும், "தன்னை அழிந்து"
விட்டால். அதாவது மனம் அழிந்து, மனம்
மனதாகி விட்டால், நாமரூப, ஜகப் பொரு
ளும், உடலும், மண்ணாகிய பரமும், பரமாகிய
மண்ணும் என, இயல்பாகவே ஆகிவிடும்.
அங்கு இருப்பது ஒன்றே, நடப்பது நலமே.
என்பதும் லக்ஷியமாகும்.

---

(16) மனோ ஜயம் பெற வேண்டுமானால். மனோ "வியாபாரத்தை" விட்டே ஆகவேண்டும்.
மனோ வியாபாரத்தை, விட்டமறு க்ஷணம்
மனோ இருள் விலகும்! அகண்ட ஜோதி தோன்றும்!



உ

(48)

மனோஜயம் பெற, வியாபாரம் விடவேண்டும் என்றால், சொந்த, பந்த, பாச, உறவுகளையும். நட்பையும்.


"நீங்கள்" குறைக்கவாம்! விலக்கவாம்! நீடித்தவோகாது. இங்கு கூடா நட்பு கூடாது! என்பதே முக்கியமாகிறது. உன் அமைதியின், சாதனைக்கு, ஒத்து வந்தால், அங்கு ஸ்ரீமக வன்நாமா வுடன், இனியவாம்! இல்லையானால் " " வுடன், மௌனம் கலக நாஸ்தி! என்பது போல், பேச்சை குறைத்துக் கொண்டு சற்று விலகவாம். காரணம், இதை ஏன் இப்படி, சொல்கிறோம் என்றால்

"பழக்க & வழக்க | தோஷ"

(பேச்சினாலும்) (செய்கையாலும்) (குணங்கள் பின்னிப் பிணைகின்றன)


குணங்களால் இங்கு, ரத்த சம்பந்தத்தால், இத்தீமை விளைகிறது. இங்கு பொருளாலும் (உயிர் கொல்லி என்ற பணத்தாலும்) உணவாலும் (ஆகார தோஷத்தாலும்) இது இணைந்து பிணைந்து, இப்பிணைப்பால், தோஷ வாக்கு பிறக்கிறது.





49

வாக்கே வாழ்க்கை யாக, இருப்பதால் இதனை,
சாண் ஏற முழம் சறுக்க! என, ஆகி விடுகிறது.
இங்கு ஸ்ரீபகவன், நாம உணர்வோடு, விலகும்
போது, தேவையில்லாத, உறவு துண்டிக்கப்படும்!
அவன்கிருபையால், தேவையான உறவு, சேர்க்கப்படும்!
இதையே, எம் ரிஷி மஹாத்மா, "அதிசய பந்து"
என்றார். இதனை வாழ்க்கையில், விதியால் வரும்
சோதனையையும், வேதனையையும், உன் பொறுமை
என்னும், சாதனையால் வெல்லலாம்!
வெல்லலாம் என்றால், கடுமையின் கொடுமை குறையும்!
இங்கு உன் சர்வார்ப்பணம், கை கொடுக்கும்!
இங்கு வியாபாரம் என்ற, "பற்றுவரவு"
வந்த கணக்குமட்டும் முடியும்! வேறு எந்த சொந்த
கணக்கும், உன்னைத் தொடாது! தொடரவும் செய்யாது.
இங்கு உன் பிரம்மார்ப்பணம், இயல்பாகவே,
அமைவதால், வியாபாரம், ஒழிந்து மறுக்ஷணம்,
மனஇருள் அகலும்! ஸ்வயம் ஜோதி பிரகாசிக்கும்!
அங்கு இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! ஸாக்ஷியாக




50

17

மனம் அசைந்தால், ஜகஜீவர்கள் தோன்றும்.
மனம் அசைவற்றிருந்தால், பரமே தோன்றும்.

---

மன அசைவு என்பது, எண்ணத்தால், விரிவடைவது.
அதாவது, தோற்றம் என ஒன்று, உண்டானால் அதை,
நான்! என்றும்! எனது! என்ற நிலையில், அஹங்கார
மமகாரத்தால், விரிவடைந்து, பின்னிப்பிணைந்து,
வினையாடி அதை, நாமரூப, ஜக ஜீவ வடிவில்,
தோற்றச் செய்து, ஜனனமரணம் உண்டுபண்ணும்!
மனம், அசைவற்றிருக்க வேண்டுமானால், எதைக்
கண்டாலும், எதை கொடுத்தாலும், எதை வாங்கி
னாலும், அனைத்தையும் "மனதாலே"
என ஓர் நிலைப்படுத்தி விட்டால் அவசியம்,
"எழுச்சி" அடங்கி, அடங்கி, அடங்கி,
அழிந்து விடும்! எழுச்சியற்ற இடம் எம் இறைகண்டாமே!
என்ற நிலை ஸத்தியமாகவும், சாஸ்வதமாகவும் இயல்
பாகவும் மாறிவிடும்! மாறியே ஆகவேண்டும்.
அந்நிலையில் பரமே நாம்! நாமே பரம்! இது ஸத்தியம்!
அங்கு இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! இது ஸத்தியம்!



(18) சர்வார்ப்பணம் / பிரம்மார்ப்பணம் செய்ய "வருத்தம்" இல்லை

தளர்ந்த மனம்! வழுவும் மனம்! அசையும் மனம்! சஞ்சலம் அடையும், மனதுடையவர்க்கே, வருத்தம்! கஷ்டம்! பாரம்! கடும் சிரமம்! தோற்றத்தான் செய்யும்.

---

இதன் காரணம் :- உடல் உலக, ஜக ஜீவர்களையும்! அநித்த நாம ரூப, பொருள்களையும்! உயிர் கொல்லியாகிய, பணத்தையும்! "உடைமை"யும்! "உரிமை"யும்! பாராட்டுவதனால், மேலே சொன்ன, மனோ சிரமம், தோற்றத்தான் செய்யும். அவை அனித்தமே, பற்று வரவு! என்ற நியதியால், கொடுக்கல் வாங்கல்! செய்ய வந்ததே என்றும். அவைகளுடைய, போக்கு வரவுகளில், மயக்கம் கலக்கம் சந்தேகம், பயம் இல்லாமல். இது ஸ்ரீபகவானுடைய, மாயா காரியம். அவரவர் வினையின்படி, ஒவ்வொருவரும், கொடுத்ததை வாங்க வேண்டும் என்றும், வாங்கியதை கொடுக்க வேண்டும் என்றும். அமைதி பெற்று "அடங்கி" நடக்கால், இந்த மனோசிரமம் தோன்றாது.



உ

அங்கு எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே! என்ற மனதளவில் விட்டநிலையில், இருப்பதையும்! கிடைப்பதையும்! நடப்பதையும்! எல்லாம் நலமே என ஏற்றால், துன்பம் **அணு** அளவும், இல்லவே இல்லை.

இங்கு மனம், அழுத்தம் இல்லாமல், மனம் புண்படாமல், லேசாக இருக்கும் பக்குவத்தில், அங்கு உன் மனம் பிரம்மார்ப்பணம் செய்ய, வெகு வெகு வெகு, சுலபமாகும்! சுகமும் ஆகும்! இது இந்த, நொடி மின் அனுபவமாகும்! எல்லாம் ஒன்றே! அதுசிவமே, அது யாமே! யாமே அது! என்று பிரம்மானந்தமாக இருக்கலாம்! இந்த பிரம்மார்ப்பண நிலையால், இந்த ஜகத்தை, நோக்கும்போது!

"**நாமரூப**" ஜக ஜீவ, சொரூபம் தோற்றது எல்லாம் மண்ணாகிய பரமாகவும்! பரமாகிய மண்ணாகவும் அவஸ்யம் மாறும். பின் அந்த, உணர்வு காட்சியும் மறையும்! அங்கு நாம் நாமாகவே, இருப்போம். நமக்கு அன்னியம், எதுவும் இல்லாத, தன்மையால், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்ற நிலை பெற முடியும்!



உ

(53)

(19) "யாம் பிரம்மம், யாம் பிரம்மம்
"யாமே" எல்லாம்! எல்லாம் "யாமே"! என்ற,
அகண்டான்ம பாவனை, செய்ய! செய்ய! செய்ய!
இப்பரபாவனையின், "ஒலி" யானது "ஒளி"யை
உண்டாக்கும் என்கிறார், எம்பிரபு மஹராஜா.

காலாதீத அந்த ஒன்றே "அகண்டா
கார பேரொளி" ஆகும். இங்கு
வாக்கே, ஜக ஜீவ, ஈஸ்வராதிகளாகவும்,
வாக்கே, வாழ்க்கையாகவும், வாக்கே, இந்த
இவ்வாத ஜகத்திற்கு, இருப்புத் தன்மையையும், இயக்கத்தன்மையையும்,
கொடுப்பதாயும், ஸத்குரு வாக்கே, ஓர் ஸத்
சீடனுக்கு, அஞ்ஞான இருளைப் போக்கி, "ஞான"
ஒளியை ஏற்றி வைப்பதாயும்.
அதே வாக்கை, மேலே சொன்ன பரபாவனையாக,
பாவனை, செய்யச் செய்ய, இந்த "தாமர
கை"! இயல்பாகவே, அனுபவம் கூட்டி வைக்கும்.



உ

54


மண்பாண்டம் என்றும், பொன் ஆபரணம் என்றும், எவரும் சொல்வதில்லை. பாண்டம் என்றும், ஆபரணம் என்று தான், சொல்லப்படுகிறது.

காரணம் என்னவென்றால்? இருப்பது ஒன்றே என்பது, சத்தியமாக பிரகாசிப்பதால், அந்த ஒன்றிலேயே, அனைத்தும் தோன்றின.

மண்ணில் பாண்டம் தோன்றுவது போலவும்!
பொன்னில் ஆபரணம் தோன்றியது போலவும்!

அனைத்திலும், அவ்வொன்றே, வியாபகமாக இருந்தாலும், "அவ்வொன்று" எவராலும், விளம்பப்படுவதும் இல்லை! விளக்கப்படுவதும் இல்லை! "அது" தோற்றத்தை, சொல்வாரும் இல்லை! கொள்வாரும் இல்லை! தள்ளுவாரும் இல்லையென, சொல்வதை விட, தனா முடியாது, என்பதே சத்தியம்!

காரணம்: அங்கு நாமரூபம், விளம்பப்படுகிறது! விளக்கப்படுகிறது! விஸ்தரிக்கப்படுகிறது! ஆகவே கொள்ளும் நிலையிலும், தள்ளும் நிலையாலும், விவகரிக்கப்படுகிறது. (பிரச்சனைகள் ஆகின்றன)





இங்கு நீ அதை, கொண்டாலும், தள்ளினாலும்,
அது ஏன் என்றும், எதற்கு என்றும், எப்படி என்றும்,
கேட்கப் போவதும் இல்லை. காரணம் அங்கு மனம்
இல்லாததே காரணம் ஆகும்! முன் சொன்ன நிலையால்,
பரபாவனையில், வாக்கு புலம் பிறலும்,
"தோஷ, குண, மனம்"!
அழிந்து இறந்தாலன்றி, அனுபவம் கூடாது, என்பது
ஸத்தியம் என்று, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.
அந்த தோஷ, குண மனம், இருக்கும் வரை,
திரும்ப திரும்ப, மண் பொம்மை, எடுத்தான் செய்யும்

(A) பரபாவனையால், தோஷ குண மனம், நசிக்கும்!
தோஷ குண மனம் நசித்தால், பரம் பிரகாசிக்கும்!

(B) தோஷ குண மனமானது, நாமரூபத்தில் விரிவடையும்!
நாமரூபம் மண் ஆனால், தோஷ குண மனம் நசிக்கும்!

(C) நாமரூபத்தை, நான் என்றால், விரிவடைய செய்வது
மனமாகும். நான் என்றதை, விட்டாலும், நாமரூபம்
நாசமாகி, மண்ணாகி விடும்!

(D) நான் என்றால், ஜனனமரணம் உண்டாகிறது!
நான் என்றதை விட்டால், ஜீவன் முக்தியின் வழி
பிறக்கும்!



உ

௫௬


இவை அனைத்திலும், உணர்ந்து நோக்கும் போது:—

"நாமரூபமே" மயக்கமாகவும்,

"நான், எனதே" கலக்கமாகவும்,

இவ்விரண்டுமே, இணைமற்றமையாகவும், விளங்குவதால், நான், எனதை, சர்வார்ப்பணத்துடனும், நாமரூபத்தை, பிரம்மார்ப்பணமாகிய, எல்லாம் பரமாகிய, மண்ணே என்றும், மண்ணாகிய பரமே என்றும், ஸத்தியமாக, உணர்ந்து விட்டால், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்பது ஸாத்தியமாகும்.

"ஓம் ஹயன்/ஹரி/ஹரன்!" ஆகிய இம்மூவரும், நாமரூப, தொழில் கர்த்தாவாக இல்லவே இல்லையென்றும், அம்மூவரும், "பர" சொரூப அம்ப, "ஸத்குரு"வாகவே, இருக்கிறார்கள், என்பதே ஸத்தியம்!





காலாதீத, அந்த ஒன்றே, சதா சிவமாகவும், மகேசனாகவும், விளையாடும் நிமித்தமாக, தோற்றத்தை, ஏற்படுத்திக் கொண்டது, என்பதே ஸத்தியம்.

அவ்வொன்றே, இரண்டாகி, தம் நிழலின், உதவியால் (யோக மாயாவால்) அண்ட, ரண்ட, பிரம்மாண்டங்களை உண்டாக்கியது!

அவ்விரண்டிலிருந்து, தோன்றிய மூன்றும், (ஹயன் ஹரி ஹரன்) தம் நிழலின், உதவியால் (யோகமாயாவால்) மண், மலை, ஜலம், தாவர ஜங்கமங்களை, உண்டுபண்ணி "மாயா" வசம் ஜகத்தையும், ஜீவகோடிகளையும், ஒப்படைத்துவிட்டு தாம் மூவரும் சும்மாவே, சுகமாக இருக்கிறார்கள்.

அம்மாயாவானது, தம் மகனை, மனதிடம் எல்லா நாமரூபங்களையும், ஒப்படைக்க, அம்மனமானது, எண்ண அடிவால், கற்பனைகளை தோன்றச் செய்து, அதை புண்ணிய பாபம் என, ஒப்பிவிட்டு, அம்மனமே, விளையாடிக் கொண்டிருக்கிறது!

இவ்விளையாட்டானது, "மாயாயுக்தம்"



# உ

"மனதிற்குமேயல்லாது"
"நமக்கு" (ஆன்மாவாகிய நமக்கு)
இல்லவே இல்லை, யென்பதே சத்தியம்!
ஆகவே இங்கு?
ஹயன், ஹரி, ஹரன், ஆகிய இம்மூவரும்,
நாம ரூப, தொழில் கர்த்தாக்களாக இல்லை,
என்பதே சத்தியம்!
அம்மூவரும், பரசொரூப, அம்சமாக இருப்பதால்,
"ஜீவஅழிப்பு" (ஜீவ முக்தனுக்கே நிலையில்)
"சத்குரு"வாக, இருக்கிறார்கள் என்பதே சத்தியம்.
இதை எப்படி இத்தனை, உறுதியாக சொல்கிறோம், என்றால்?
முதலில் எல்லாம், மண்ணே என்பதை, உறுதி செய்!
(அம்மண்ணே பரம்! பரமே அம்மண்) இதனுடன்
மாயா இணைந்து, பிணைந்த தன்மை, நாமரூப, ஜக
தோற்றமும், ஜீவ சொரூபங்களும் உண்டாயின.
இங்கு மாயா வின்மைகள், மனமும் சேர்ந்த தன்மையால்
புண்ணியபாபம், என்னும் ஒர் நிலையால்,




உ


"கண்ணாமூச்சி" விளையாடு,
நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்பதே சத்தியம்!
இது "மாயா மனதின்"! விளையாட்டேயன்றி, நமது ஆத்மாவின்
விளையாட்டு இல்லவே இல்லை. ஆகவே அம்மூவரும்
நம் வழிகாட்டிகளாகிய, ஸத்குருவேயன்றி,
தொழில் கர்த்தா, இல்லவே இல்லை! ஆத்மாவாகிய,
நமக்கு, இந்த மாயாவின், நாமரூப மயக்கமும்,
வேண்டாம். நமக்கு இந்த மனதின், விளையாட்டும்
வினையமும், வேண்டாம். அம்மாயாவும், அம்
மனமும், எம்முள் தோன்றியதே! ஆகவே,
அந்த நாமரூபம், அனைத்தும் "ராம்" மண் அம்ஸ
பரமேனன்றும், "ராம் பர" அம்ஸ, மண்ணே என்றும்
உணர்ந்த கனவ், இருப்பது ஒன்றே! நடப்பது நாடகமே!

—×—×—×—×—×—×—×—

(21) 21வது பாடல், சற்று கூர்ந்து, கவனிக்கவும்!
பாடலையும், விளக்கத்தையும், இணைந்தே கருதிமை.
கருத்து ஒருமித்து, உணர்ந்து அது ஆகவும்!



அகண்டாகார விருத்தி அடைந்தவனே,
"கிடஞானி" எனகூறி விட்டு, இந்த
37வது பாடலில், அந்த கிடஞானியின், உறுதிநிச்சயம்
அந்த சமாதி விட்டு, அதாவது அகண்டாகார
விருத்தியை விட்டு "பிரிந்த" காலத்தில்,
அதாவது "சாட்சி" விருத்தியில் இருக்கும் போது,
முழுமையாக, சாட்சி விருத்தியில், மூழ்கி விடாதே!
என்றும், அகண்டபாவனையை, ஓர் கரத்தால்,
பற்றிக் கொண்டும் (அதுவே நாம்! நாமே அது! என்ற
உணர்வுடன், இருந்து கொண்டு) மறு கரத்தால்,
"எல்லாம் நீயே" என்ற, சர்வார்ப்பணத்தோடு
சாட்சிபாவனையின், காரிய நீக்கம் செய்யலாம்.
இங்கு இருப்பும், அதிகம் வைக்காதே, எனகூறி
விட்டு, எந்த வினையும், அகண்டபாவனையின்
அம்சமாக இருப்பவனுக்கு, சமாதி & நிஷ்டை.
என்ற மோக்ஷ சாதனை, தேவை இல்லை என்கிறார்
நிஷ்டை:- உள் ஆழ்தல்!
சமாதி:- உள் ஆழ்ந்து மூழ்கி, ஆழ்ந்த அனுபவம் பெறுதல்!



பாசமில்லா சமாதி:– லௌகீகமும், வைதீகமும் (கலக்கம் மயக்கம்) அற்ற நிலையே, சகஜ சமாதியாகும்! இது எந்த வித, முயற்சியும் பயிற்சியும் இல்லாமல், இலகுவாகவும், இயல்பாகவும், இயற்கையாகவே, "அது" ஆகவே, இருக்கலாகும்! இங்கு ஆரம்ப பயிற்சியில், அனுபவித்த, நிர்விகல்ப சமாதி என்பது, ஸங்கல்ப விகல்பம், அற்றதாகும். அதாவது, கற்பனையின் "மனமும்" குற்றம் குறையின் "எண்ணமும்" இல்லாத நிலையாகும்!

மேலே சொன்ன, இவ்விரண்டும், அற்ற ஞான, பிரம்மானந்த, அனுபவத்தில், இருக்கும் போது:– நாமரூப, ஆவரண மயக்கம் இராது! இருக்க முடியாது! இருக்க இயலாது! அதே நேரம், அதனால் தோன்றும், தோஷ குணமான, விக்ஷேப கலக்கமும் இராது! இருக்க முடியாது! இருக்க இயலாது! அங்கு எல்லாம் மண் என்ற பரமே! பரம் என்ற மண்ணே! என்ற உணர்வில், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என உணர்வு பெற முடியும்!

—×—×—×—×—×—×—×—



இ


(62)

(22)

மனம் நின் சகஜ சொரூபமானால், அதுவே
மனம் மாண்ட (மஹாத்தான) நிலையாகும்!
மனம் மாண்ட நிலையே, ஜீவன் முக்தியாகும்!
இதை மனது ஒருமையுடன் செய்வாயாக!

---

இதில் ஓர் முக்கியம் என்னவென்றால்?
ஒன்றை விட்டால் தான் ஒன்றை பற்ற முடியும்! என்றும்,
ஒன்றை பற்றினால் தான் ஒன்றை விட முடியும்! என்றும்,
ஸ்ரீ மஹான்களின், அனுபவம் இருக்கிறது!
ஆகவே இங்கு ?
நீ "சகஜானுபூதி" பெற்றுவிட்டால்,
மனம் மாண்டு போகும் (மஹாத்தாகும்) என்றும்;
"அல்லது?"
உன் சாதனையால் "மனம்" மாண்டு போனாலே,
(மனம் மஹாத்தானாலே) சகஜானுபூதி பெற முடியும்!
என்றும், பொருள் கொள்ளலாம். இதன்
விளக்கம், எப்படி என்றால்?





பயன் கருதாமல் செய்த பவன் (புண்ணியம்)
முன்பூர்வ, ஜன்மங்களில் செய்து, அவை
ஒட்டு மொத்தமாக, இப்பிறவியில், உனக்கு
சாத்தியமாகி விட்ட "குறை" தொட்ட "குறை"
இருந்திருக்குமாயின், உன் சகஜானுபூதியால்,
உன் தோஷமனம், "வலு" இழந்திருக்கும், என
அறிக! ஆகவே இங்கு உண்மையானது, அதிக
முயற்சி, பயிற்சி, பண்ணுவதே, இயல்பாகவே
வெய்யிலின் மஞ்சள் என, மறைந்து விடும்.

அல்லது ?
உன் இச் ஜன்மாவில், உன் புண்ணியமும், உன்
ஆன்ம நாட்ட, தேட்டமும், ஏக்கமும், உனக்கு
பக்குவமாக இருந்து, கொண்டு, ஓர் ஸத்குருவை
காட்டியோ! அல்லது நீ தேடியோ! அவர் மூலமாக,
உன் சாதனை முற்றுப் பெறும் போது, உன் மனம்,
மறைத்த என, தன்மையாறும், உன் சகஜானுபூதி,
இயல்பாக கூடி, பிரகாசிக்கும் என உணர்க!
இங்கு ஓர், அனுபவ வார்த்தையை, எழுதிப் போகிறோம்.



உ

(64)

அதாவது:- "மனதொருமை" யுடன் செய்து, மனதை மாய்த்து, மஹத்தான முக்திநிலை பெறுவாய் என்றோர்!

மனஓர்மை என்றால் – பிரம்மம் ஸத்தியம் என்றும், ஜகத் மித்தை என்பதிலும், உறுதி நிச்சயம், சற்றும் வழுவாதிருக்க வேண்டும். அடுத்த நிலையில், எல்லாம் "மண்ணே" மண்ணுக்கு அன்னியம் எந்த தோற்றமும் இல்லை. எல்லாமே, வந்து இருந்து மாறி, மறையக்கூடியதே. மேலும், பற்று வரவான் நிமித்தம், போக்கு வரவு, "ஒழுங்காக"

நீ அமைதியாக, ஆனந்தமாக, நடைபெறுகிறதே நீயன்றி, பேதமோ பாரபக்ஷமோ, இல்லவே இல்லை. "அடங்கி" இருந்து அனுபவித்தால், இதுவே மனதொருமையுடன், ஒன்றும் நிலையாகும். இதன் முக்கிய, ரகசியம், எல்லாம் மண்ணாகிய பரமே, பரமாகிய மண்ணே, மண்ணுக்கு அன்னியமாய், எவையும் இல்லை, ஆகவே இங்கு, வீண் மனச்சஞ்சலங்களே தேவையில்லை என்ற நிலையில், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என அடங்குவாயாக, அடங்காதே!

—x—x—x—x—x—x—x—x—



(23) இயல்பான மௌனம் வேண்டும்! கட்டாய மௌனம் வேண்டாம்! அந்த மௌனகாலங்களில், கவலைபயம் இல்லாமல் இருக்க வேண்டும்! எங்கே? "தற்போதம்" சூனியமாக (அழிய) வேண்டும். "தற்பதம்" நிலை பெற வேண்டும்!

மௌனம் என்பது:— வாய் பேசாமல் அடக்கி, இருப்பது மௌனம் ஆகாது. நாம் "அடங்கி" இருப்பது மௌனம் ஆகும்!! அதாவது?

(A) ஸ்ரீபகவான் & குரு உணர்வோடு / அவன் செயல் என்ற நிறைவோடு — எல்லாம் பேசலாம்!


(B) சள சள சள என்று பேசாமல் தேவைக்கு மட்டும் குறைவாக பேசலாம்!

(C) கடும், சுடும், கபட, வார்த்தை, பேசாமல், பிறர் மனதை புண்படுத்தாமல், நாவை கட்டிக்காக்கலாம்!

(D) "வீண்" வார்த்தை பேசாதிருக்கலாம்!

(E) நன்மையையே எண்ண வேண்டும்! நன்மையையே பேச வேண்டும்! நன்மையையே செய்ய வேண்டும்!

இதுவே "மௌனம்" ஆகும்!



இந்த மௌனத்தை, இக்கலியுகம் ஏற்காது
என்பது ஸத்தியமே!
இம்மௌனத்திறல், அளவற்ற தேவை நின்று விடும்
அளவற்ற உறவு துண்டிக்கப்படும்! அளவற்ற
பற்று வரவு நிறுத்தப்படும்! இங்கு அவன்
திருவையாறில், உன் வரவும் செலவும்,
கணக்கிடப்பட்டு, உனக்கு உரியது கிடைக்கும்
தேவையில்லாதது, தானே நின்று விடும்!
இவை அனைத்தும், இதுகால பரியந்தம் உன்
வாழ்நாளில், அறியாத அனுபவியாத, ஒன்றாக
தோற்றும்! இது பெரும் "புதிராகவே"
தோற்றுவதால், மனதில் பயம் உண்டாவது இயல்பே
இங்கு இவ்வுலகம், உன்னை விட்டுவிடும்!
இவ்வுலகம், உன்னை விட்ட மறுகணம், ஸ்ரீபகவான்
உன்னை, ஏற்றே ஆக வேண்டும்.
இது எப்படி நடைபெறும் என்றால்?
நீ "அடங்கினால்" உலகம் உன்னுள் அடங்கும்.
நீ "அடக்கினால்" உலகம் உன்னை அடக்கிவிடும்
என்ற ஸத்திய வாக்குப்படி,





நீ உன் வாக்காலும், செயலாலும், நீ உன்னுள்

# ஸ்ரீபகவானுள்

அடங்கும்போது

இவ்வுலகம் உன் தெய்வீக எண்ணத்தினுள் அடங்கிவிடும்

உனக்கு அன்னியமாய், உலகமும், பொருட்களும், ஜீவகோடிகளும், இருக்க முடியாது! இருக்கக் கூடாது! இருக்க இயலாது! இந்நிலையில்தான், ஸ்ரீ மஹான்களின்

# "எல்லாம் நீயே"

என்றவாக்கிய வாசகம் பொருந்தும்!

இந்நிலையில்தான், உலகம் உன்னை விட்டாலன்றி, ஸ்ரீபகவான் ஏற்க மாட்டான் என்றும், ஏற்க முடியாது என்றும், ஏற்க இயலாது என்றும், சொல்லும் வாசகமானது, உலகமே இயற்கை! இயற்கையே உலகம்!

இயற்கையே இறைவன்! இறைவனே இயற்கை!

ஆகவே, உன் தூல சரீரத்தை, அது வாகிய அவன் பார்த்துப்பனென, சொன்னதாகும், அது வாகிய மண்ணே, மண்ணாகிய உடலாக வளர்த்து கொண்டிருக்குது! ஆகவே இருப்பது ஒன்றே! நடப்பது அவனே என்பது சத்தியமே.



உ



சென்ற இதழ் தொடர்ச்சி:— இங்கு ஜீவனின், சந்தேகத்தால், கலக்க பயம் வருவது இயல்பே. அதற்காகத்தான், இந்த வார்த்தையை, போட்டார் எம்பிரான்:— தற்போதம், அழியவேண்டும்! என்றும், "தற்பதம்" நாம் ஆகவேண்டும்! என்றும். சொன்னார் அதாவது? "ஈசணி"யின் பாடம் வேண்டாம்! என்றும் "ஈசன் நாம்" ஆகவேண்டும்! என்றும். ஆகவேதான், விகல்பம் தீர்த்து (குற்றம் குறை பேதம்) தற்பதம் என்ற, பரமார்த்த நிலை பெற வேண்டும் என்பதே, கருத்தாகும். இங்கு குற்றம் குறை பேதம் எனச் சொல்வது "ஈசகர்த்துவம்"! என்ற தொழில்! மனைவி! தேவாவணியம்! இவை வேண்டாம் என்றும்; அவனே நாம்! நாமே அவன்! என ஆகவேண்டும் என்பதே, முக்கிய கருத்தாகும்!




(69)

குற்ற உணர்வு, வேகம், அழிந்தால் நாம் நாமாக, இருப்போம். அங்கு நமக்கு அன்னியமில்லை!

(24) விறகு தீர்ந்தவுடன், அதைப் பற்றி எரியும் அக்கினி தானே, அடங்கி மறையும் தன்மை போல், மனதின் விகல்பமாக தோன்றும், வார்த்தையும், செயலும், அடங்கி அழிந்து விட்டால், பிரம்மமாகிய நாம், நாமாகவே இருப்போம்.

அம்மண்ணுக்கு நாமரூபம், அனைத்தையும் அழித்து, தம் மண்ணுக்கும், சக்தி உண்டு. அதேபோல் ஜலத்திற்கும் நாமரூபம், அனைத்தையும் அழித்து, தம்மோடு (ஜலத்தோடு) கலக்கும், சக்தி உண்டு. ஆனால் அக்கினிக்கு, (நெருப்புக்கு) நாமரூபங்களை, எரித்து, தாமாக்கும் சக்தியல்ல, அனைத்தையும் சாம்பல் (பஸ்பம்) ஆக்கும் சக்தி உண்டு. ஆனாலும் இரும்பையும், கல்லையும், சாம்பல் ஆக்க முடியாது. தான். ஆனாலும் "பொடிப்பொடியாக்கி" நாமரூபம், அழிக்கச் செய்து, தூளியாகவும்; ஜீவ அணுவாகவும், ஆத்மாவாகவும். ஆக்கும் சக்தி உண்டு. ஆகவே பஞ்சபூதங்கள், அனைத்திலும், நாமரூபங்களை, அழித்து இல்லாமலாக்கத முடியும்.





நாமரூபங்கள் அழிந்தால், "அது அது"! அதனதன்! தன்மையை, (குணத்தை) இழந்து, தூசியாகவும், ஜீவ அணுவாகவும், ஆத்மாவாகவும், "மாற" முடியும்! என்று சொல்வதை விட, காலாதீத "அதனுடைய" ஸ்வய சொரூபத்தை, இயல்பாகவே, அடைந்துவிடுகிறது.

அக்கினியானது, ஒன்றுடன் ஒன்று, உரசுவதால் தான், தோன்றும். அக்கினியானது, ஓர் நாமரூபத்தை, பற்றிக்கொண்டு விடுமேயானால், நாமரூபம், அழிந்து சாம்பல் ஆனாலன்றி அதை விடாது. நாமரூபம், அழிந்தால், அக்கினிக்கு வேலை இல்லை! அது எப்படி, திடீர் என வந்ததோ, அப்படியே திடீர் என மறைந்து விடும்!

இதைப் போலவே?

ஸங்கல்ப விகல்பத்தால் (கற்பனையின் கூற்ற உணர்வுகளால்) தோன்றும், "நாமரூப" ஜக ஜீவ, தோற்றங்கள் விறகுகள் ஸர்வார்ப்பணம் என்று, (எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடைய தோற்ற)




உ

ஸ்ரீ பகவத் "ஞாயஸ்" நன்றாக நாய்ந்து உவர்த்தும் (பக்தியைப் பக்குவப்பட்டபின்) "ஸ்ரீ ஸத்குரு" என்ற, லென்ஸால் ஸூரிய சக்தியை, வைத்துக் கொண்டு, (இயக்கம் இல்லாத குரு ரூபமாக, இயக்கம் உள்ள, ஸ்ரீ பகவான் இயங்கிக் கொண்டு) பிரம்மார்ப்பணம் என்னும், (எல்லாம் ஒன்றே! அதுருவமே! அது சிவமே! அதுயாவே!) "ஞானக்கினியால்" (லென்ஸால்) எரிந்து, பஸ்பமாகி விடுகிறது!

குற்ற உணர்வு (அஞ்ஞானம் [ஹாகு]) இருக்கும் வரை, ஞானக்கினிக்கு, வேலை உண்டு.

குற்ற உணர்வு (அஞ்ஞானம் [ஹாகு]) தீர்ந்த உடன், ஞானக்கினிக்கு வேலையும் இல்லை! இருப்பும் இல்லை! இயக்கமும் இல்லை! ஞானக்கினி என்ற, யாகாக்கினி! காடாக்கினி என்ற, அகண்டப் பேரொளியில், கலந்து மயமாகி விடும் என, அனுபவ ஸ்ரீ மஹான்கள் சொல்லக் கேள்விப்படுகிறேன்!





இதிலிருந்து என்ன, உணர்த்தப்படுகிறது என்றால்?
நம் கவனக்குறைவால் (அஞ்ஞானத்தால்)
தோன்றியதாக கூறும், நாம ரூப, ஜகஜீவ,
சொருபங்கள் (இறகுகள்) அனைத்தும்,
பக்தியால் (ஸ்ரீபகவான் என்ற சூரியனால்)
காய்ந்து உலர்த்தப்பட்டு, ஸத்குரு என்ற ஞானசூரியனால்
(வெண்சாம்பல்) பஸ்பமாகி விடுகிறதென,
"கதை கதை"யாக சாமான்யர்கள் பேசிக்கொள்கிறார்கள். அதுமெய்க்கதையே
எல்லாம் பொய்யே!
இதனால் இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என சுகமாகும்.

---

(௨௫) லௌகீகத்திற்கு, புண்ணிய பாபம் உண்டு.
வைதீகத்திற்கு, ஸத்திய தர்மம் உண்டு.
பரமார்த்திகத்திற்கு, எந்த தர்மா தர்மங் கருமம்
இல்லவே இல்லை.


---

லௌகீக புண்ணிய பாபம், என்பது இரண்டும் ஒன்றே
ஓர் நாணயத்தின், இருபக்கம் போல் ஆகும்! புண்ணியமே
பாபமாய் மாறும்! பாபமே புண்ணியமாய் மாறும்.
இது "மாயை" பாவனையே தவிர வேறொன்றுமில்லை.
இவ்விரண்டும், பிறவியின் வித்து ஆகும்!



வைதீக, ஸத்திய தர்மம் இரண்டும், முறையே வாக்கும், செயலும் ஆகும். அதாவது, ஸத்தியம் பேசவேண்டும்! தர்மம் என்பது, ஸத்திய வாக்கை பத்துவ நிலை கண்டு, சொல்வது தர்மம் செய்வதாகும்! நாமரூப பொருள்களோ, தர்மம் செய்வது, இரண்டாம் இடம் பெறுகிறது. இந்த ஸத்தியமும் தர்மமும் நிலை கண்டு; வாழ்க்கையின், வசதியான பிறவியும், தெய்வ பக்தி உள்ள, புனித பிறவியும், பதமுக்திக்கும், வழி வகுத்துக் கொடுக்கும்.

இந்த லௌகீகமும், வைதீகமும், பிறவா நிலை (ஜீவன் முக்தியை) தர முடியாது. ஆகவே, பரசொரூப ஸ்திதிக்கு, மேலே சொன்ன, இரண்டும் பொருந்தாது. இந்த பரசொரூப ஸ்திதிக்கு, எந்த தர்மாதர்மங்களும், இல்லவே இல்லை. இதுவே, ஜீவன் முக்தியாகும்! இவ்விரண்டும், விட்டால் மட்டும், ஜீவன் முக்தி பெற முடியும். மேலே சொன்ன அவ்விரண்டும், விட்ட நிலையில், "பட்ட" மரமேனும் "குத்துக்" கல்லைப்போலும்; அசைவற்று! உணர்ச்சியற்று! சும்மா இருப்பதாகும்! ஸ்ரீமஹான்கள் அனைவரும், ஏன் இந்த, குத்துக் கல்லையும், பட்டமரத்தையும்; உதாரணம் சொல்கிறார்கள் என்றால்?



ஸ்ரீ "ஸ்தூலம் | சூக்ஷ்மம்" முறையே,
நாம ரூப, குண கோஷ்டி, "பசையால்"
நினைவதும் (ஊறுவதும்) இல்லை! தளிர்ப்பதும் இல்லை!
இவ்விரண்டும், கால கதியினால், பொடிப் பொடியாகி,
துகளாகி, அணுவாகி, ஜீவ அணுவாகி,
ஆத்மாவாகி, பரமாத்மாவாகி, பரப்பிரம்மம்,
ஆகி, தாம் தாமாக! நாமே அதுவாக! அதுவே
நாமாக! ஆகிவிடுகிறது. அந்த மனமற்ற நிலையில்,
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என இருப்பா
யாக!

26 (A) கணிக்கும் காலம் இல்லாததனால், காணும் காட்சி இல்லை!
(B) தூலம் இல்லாமையால், தொடரும் பவபந்தம் இல்லை!
(C) அஞ்ஞானம் இல்லாமையினால், மாயா இல்லை!
(D) நாமரூபம் இல்லாமையால், அதன் இருப்பு இல்லை!
(E) தோற்றம் இல்லாமையால், அழிவு இல்லை!
(F) நாமரூப வஸ்து இருந்தால், இது இப்படி இருக்கிறது
என சொல்லமுடியும்? ஸ்வச்சொரூபமன்றி அஸ்தி இல்லை!
(G) பதமோ! பரம பதமோ! பதார்த்தமோ!
எந்த நாமரூபமும், இல்லவே இல்லை.



75


(H) எந்த ஜக ஜீவ, பரம் (தேவ தெய்வங்கள்) இவைகளையும், நாமரூபமாக இல்லை!

(I) இல்லை என்ற சொல்லும் இல்லை! இங்கு இருக்கிறது என்ற பொருளும் இல்லை! வாக்கால் சொல்லும், எப் பொருளும் இல்லை! மேலே கூறிய, இவை அனைத்தின் "சொற் பொருள்" ஓர் அணுவும் இல்லை!

(J) சும்மாவே சுகமாக, இருக்கும் "மௌனியாய்" பிரம்மானந்தம் மேவியவனாய், அகண்டானந்தம் நாமே! என "முக்தி" சார்வாயாக!

(A) கணிக்கும் காலம் இல்லாததனால், காணும் காட்சி இல்லை — காணும் காட்சிகள், மண்ணாகிய பரமே இருப்பதால் காட்சியும் இல்லை! காட்சியின் காலங்களும் இல்லை! அங்கு அது பற்றிய கருவி, பண்ணும் மனமும் இல்லை!

(B) விளக்கமான, அறியாமையின் மாந்தர், கூறும் சரீரமானது, மண்ணாகிய பரமே இருப்பதனால், பவபந்தம் எனக் கூறும், வினைத் தொடர்பும் இல்லை!





(C) அறியா மாந்தர், எனக் கூறும், எவரும் இல்லை! காரணம் அனைத்தும், மண்ணாகிய பரமே! ஆகவே, மாயாவோ! ஸ்ரீயாமறையின், அஞ்ஞானமோ இல்லை!

(D) ஜடகடபடாதிகள் (உலகம், ஜீவசரீரங்கள், தாவரவர்க்கங்கள்) எவையும் "நாமரூபமாக" இல்லை. எல்லாமே, மண்ணாகிய பரமாகவே இருக்கிறது.

(E) தோற்றம் இல்லாததனால், இருப்பும் இல்லை! அதன் அழிவும் இல்லை:- விசித்திர தோற்றம், அனைத்தும் மனோமய கற்பனையே. எண்ணத்தில் உண்டு! மறந்தால் இல்லை. இங்கு மனமே, இல்லாதிருக்கும் போது, பரமாகிய மண்ணே இருப்பதால், அது அதுவாகவே, இருக்கிறது. ஆகவே தோற்றமோ, இருப்போ, இல்லவே இல்லை!

(F) நாமரூப வஸ்து, இருந்தால், இது இப்படி இருக்கிறது, இருந்தது என, சொல்ல முடியும்? இங்கு "ஸத்தே ஸத்தாக" வந்து! ஸித்தே சித்தமாக வடிவெடுத்து, "ஆனந்தமாக" விளையாடியது! ஸத் ஸித் ஆனந்தத்தை தவிர, வேறு எந்த நாமரூபமும், இல்லவே இல்லை. அவை அனைத்தும் மண்ணாகிய பரமே ஆகும்.




# இ

௭ பூதமோ! பரமபூதமோ! பதார்த்தங்களோ!
எந்த நாம ரூபத்துடனும் இல்லை
வரிவடிவ! வாக்கு வடிவ! பூத அர்த்தங்களோ!
"பதமுக்தி" எனப்படும், பரமபதங்களோ!
மோன, போன, பொருள்களான, "பண்ட"
பதார்த்தங்களோ! எவையும் எந்த நாம ரூபத்
துடன், இல்லவே இல்லை. எல்லாம் மன்னுகிய பரமே!

௮ எந்த ஜக ஜீவ பரம், (தேவ தெய்வங்கள்)
இவை எவையும் நாமரூபமாக இல்லவே இல்லை!
கோடானு கோடி, அண்டங்களும்! கோள்களும்!
அந்த சூர்ய சந்திராதிகளும்! பரமபத சொரூப,
தேவ தெய்வங்களும்! தூலமாகவோ! சூட்சுமமாகவோ!
எந்த "நாமரூபமாக" இல்லவே இல்லை.
எல்லாம் மன்னுகிய பரமே!

௯ இல்லை என்ற சொல்லும் இல்லை! இங்கு இருக்கிறது
என்ற, பொருளும் இல்லை! வாக்கால் விவகரிக்க
எப் பொருளும் இல்லை. இவை "அனைத்தின்"
சொற் பொருளும், ஓர் அணுவும் இல்லை!





ஒன்று இருந்து மறைந்தால், அது இல்லை எனலாம்!
மறைந்திருந்து பின் தோன்றினாலும், அது உண்டு எனலாம்!
ஒன்றும் வரவும் இல்லை! வந்து இருக்கவும் இல்லை!
இருந்து மறையவும் இல்லை! மாறி மறையவும் இல்லை!
மேலே சொன்னவைகள், "வரி" வடிவமோ!
"வாக்கு" வடிவமோ! வரையவோ! சொல்லவோ!
முடியவே முடியாது! இயலாது!! இல்லவே இல்லை!!!
ஆகவே அது இருந்தும் இல்லாததே! ஆகவே அதை "இல்லை"
எனச் சொல்லலாம்! ஒன்றுக்கும் உதவாத! உதவ முடியாத
ஒன்று இல்லை யென்றால், சொல்ல முடியும். ஆனாலும்
இன்று இருப்பதைப் போல் தோற்றும் அனைத்து,
அண்டாண்ட பிண்ட பிரம்மாண்ட ஜட கடபடாதிகள்
ஜீவஸ்வரூபங்கள், தேவ தெய்வ தோற்றங்கள்,
"எல்லாம்" அந்த ஒன்றுக்கு அன்னியமாயில்லை.
அனைத்திற்கும், ஆதாரமாயும், ஆதரவாயும், ஆகாரமாயும்!
ஆனதே அந்த ஒன்றே! "அது" இல்லாமல், இவைகள் இல்லை.
"இவைகள்" இல்லாமல் "அது" உண்டு.
என்பதே சத்தியம்!



(79)

உ சொல்லும் & பொருளும் என்றால், **நாமரூபம்** எனக்குறிக்கும் என அறிக.

ஆகவே எந்த "**சொற் பொருளும்**"! அதற்கும் பொருந்தாது என்பதை விட, சொல்லும் இல்லை! பொருளும் இல்லை! ஆனால் அது உண்டு!

சும்மாவே இருக்கும், மஹா மௌனியாய்! பிரம்மானந்தம், மேவியவனாய்! அகண்டானந்தம் "**நாமே என**" "**முக்தி**" சார்வாய்!

சொல்லும்! பொருளும் அற்று! வேண்டாச் செயலும் அற்று! "**சும்மா**" இருப்பதுவே "**சுகம்**"!

என்ற ஸ்ரீமஹான்கள், அனுபவ வாசகப்படி, சொல்லும் வாக்கும்! வாக்கின் பொருளும்! பொருளின் தோற்றமும்! அற்றுப் போக வேண்டுமென்றால்? எல்லாம் மண்ணே! மண்ணே எல்லாம்! மண் ஆகிய பரமே! பரமாகிய மண்ணே! என அடங்கின் நிஜ பாவம் இருப்பது ஒன்றே! நடப்பது நாடகமே! என முடியும்!

— × — × — × — × — × — × —




Abode of Love

You Are Everything!